# குறிஞ்சித் திட்டு

## பிரிவு—1

இப்பகுதியில், குறிஞ்சித் திட்டு, அதன் தன்மை என்ன? மக்கள் நிலை, வாழ்க்கை என்பவைகள் உயிரோவியமாகின்றன.

### அறுசீர் விருத்தம்

கடல்கொண்ட குமரி நாட்டில்
கடல் கொள்ளாக் குறிஞ்சித்திட்டு."
மிடல்கொண்டும், வேறு நாட்டார்
நெருங்கவே விடாமை கொண்டும்.
நடல்கொண்டும், விளைச்சல் கொண்டும்
நலங்கொண்டும், மகிழ்ச்சி கொண்டும்,
இடல் கொண்டும், அறமே கொண்டும்.
எல்லாங்கொண்டு திகழ்ந்த தங்கே.

பிறர்நாட்டைப் பிடித்துத் தாமே
பிழைக்கும்தீ யார்வி ழிக்கு
மறைவாக நடுக்க டற்கண்
மற்றிந்தக் குறிஞ்சி நாட்டை
நிறைநாட்கள் வாழும் வண்ணம்
நிறுவினாள் இயற்கை அன்னை
குறைவின்றித் தொன்மை போல
வாய்ந்தது குறிஞ்சித் திட்டு.

மதமில்லை குறிஞ்சித் திட்டில்
மதம்பெற்ற சாதி யில்லை!
இதுபெயருள் என்று தச்சர்
ஈந்திட்ட உருவங் காட்டி
மதிமாய்க்கும் கோயி லில்லை!
ஆதலால் மக்கள் நெஞ்சில்
கொதிப்பில்லை; பொதுப் பணத்தைக்
கொள்ளைகொள் ளுவது மில்லை.

வேற்றுவர் படைஎ டுப்பு
விளைந்ததே இல்லை அங்கே!
மாற்றுவோம் தமிழ் ஒழுக்கம்
எனப்பிறர் வந்த தில்லை

ஏற்பவர் வந்த தில்லை;
இருப்பவர் ஆதலாலே!
சீற்றமே எவர்க்கும் இல்லை.
சிரிப்பிலா முகங்கள் இல்லை.

பிறர் நாட்டை எதிர்பார்க் கின்ற
ட்ற்போக்கு நிலை இல்லை.
பிறர்நாட்டைத் தாய்நா டென்பார்
உள்நாட்டில் பிழைப்ப தில்லை.
பிறமொழி தமிழிற் சேர்க்கும்
பேடிகள் நுழைந்த தில்லை.
அ·றுமுதல் நான்கு கூறும்
தமிழ்மறை அலால்வே றில்லை.

ஏழாயி ரங்கல் என்று
பரந்தநல் குமரி நாட்டைப்
பாழாக்கி விழுங்கித் தீர்த்த
பழங்கடல் வெள்ளம் இந்த
வாழாது வாழ்கு றிஞ்சி
மண்ணினை நடுவில் விட்டுச்
சூழாது சூழ்ந்து சுற்றுக்
காவல்செய் திருந்த தன்றோ!

நடுவினில் நூறு கற்கள்
பரப்புள்ள நற்கு றிஞ்சி
படைகொண்டு வருவார் தம்மால்
பழிவாங்கப் படுவ தில்லை.
படைகொண்டு வருவார் வந்தால்
பாங்கெலாம் சுழல்கள் காண்பார்
அடியொடு மாள வேண்டும்
சுழல்களால் அடியில் மூழ்கி.

அயல்நாட்டார் குறிஞ்சித் திட்டை
அறியார்கள் அதுபோல் இத்தத்
துயரிலாக் குறிஞ்சி நாடும்
நம்நாட்டைத் துறந்து வேறோர்
புயல்நிகர் நாட்டு மண்ணைப்
போய்மிதித் ததுவும் இல்லை.
நயனுற ஆண்ட மன்னர்
நாலாயி ரத்தார் ஆவர்.

எவர்படை எடுப்பும் இன்றி
இயற்கையால் வளர்ச்சி பெற்ற
நவையிலாக் குறிஞ்சித் திட்டு
நற்றமிழ் வளர்ச்சி பெற்றும்

கவிஞர்கள் பலரைப் பெற்றும்
கைத்தொழில் வளர்ச்சி பெற்றும்
குவிபுதுத் தொழில் கலைகள்
கொளப்பெற்றும் வந்த தாகும்,

இத்தனை பன்னூற் றாண்டாய்
இத்தனை மன்ன ரால்எள்
ளத்தனை குறைவி லாமல்
இயன்றஇக் குறிஞ்சி நாட்டில்
முத்தமிழ் நெறியி ழைக்கும்
முட்டாளாய்த் 'திரைய மன்னன்'
தொத்தினான் ஆட்சி தன்னில்;
துயர்ந்தது குறிஞ்சி நாடே.

பிரிவு — 2

அயல்நாடு சென்ற திரைய மன்னனை துறைமுகத்தில் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

அகவல்

குறிஞ்சித் திட்டின் துறை முகத்தில்
குடிகளிற் பல்லோர் கூடி யிருந்தனர்.
அறிவழ கன்எனும் அமைச்சன் இருந்தான்
செழும்படைத் தலைவன் சேந்தன் இருந்தான்
அலுவ லகத்தினர் பலபேர் இருந்தனர்.

காலைக் கதிரவன் கடல்அ லைகளில்
மேலெல்லாம் ஏற்றும் மெருகின் அசைவையும்
அவர்கள் கண்கள் அடைய வில்லை.
நீர்ப்ப ரப்பின் ஆர்ப்பும் அவர்களின்
காது பருகக் கருத வில்லை.
அயல்நாடு சென்றதம் அரசர் திரையனார்
வருவதோர் கப்பல் வந்திடு கின்றதா?
என்று கடல்மேல் இறைந்தன கண்கள்!

ஏமாந்து போகவே எண்ணிலா முகங்கள்
இரங்கின; சேந்தன் இயம்பு கின்றான்:
'அரசர் அயல்நாடு சென்றார் நாட்கள்
ஐம்பதும் ஆயின அன்புறு குடிகள்,
நாடொறும் கடற்கரை நண்ணி அரசர்
வரவுபார்த் துப்பார்த்து இரவு திரும்புவர்.
தாயை இழந்த கன்றுகள் தம்மை
ஒத்தனர் அவர்கள்! உள்ளம் ஒடிந்தனர்.

இரண்டாண் டாக மழையே இல்லை.
விளைச்சல் குறைந்தது. விலை ஏறியது.
கட்டா தென்று கதறு கின்ற
தொழிலா ளர்க்கெலாம் வழிசெய வேண்டும்

நெய்யும் தொழிலும் நின்றது: நற்பயிச்
செய்யும் தொழிலும் சிதைந்தது பல்பொறி
படைக்கும் தொழிலும் பறந்தது; மலைக்கல்
உடைக்கும் தொழிலும் ஒய்ந்தது; மன்னர்
மறக்கத் தகாத இவற்றை மறந்தார்.

பிறநாட் டாரின் உறவையோ வரவையோ
நஞ்செ ன வெறுப்பவர் நம்நாட்டு மக்கள்
அயல்நா டுகளை அண்டி அவற்றை
நயந்து பிரிவினை நாடகம் நடத்தி
ஆளுவோர் காலடி நக்கி அதன்மேல்
தம்மொழி புகுத்திச் செம்மை ஒழித்து
விபூடணர் இருந்தால் வேண்டிக் கூட்டி

இரண்டுபடு நாட்டின் தலையில் ஏறிச்
சுரண்டும் தலைவர் தொல்லுல கிற்பல!
சுரண்டும் நாடுகள் தொல்லுல கிற்பல!
பிறரை ஆள்வதைப் பெரும்படை உள்ளதை
வல்லரசென்று வாழ்த்துவார் அவர்கள்
மூன்று சந்தையில் முடிச்சவிழ்த் தவனைத்
தக்கவன் என்று சாற்றுவார் போலும்.

எந்நாட் டுக்குநம் ஏந்தல் சென்றாரோ?
அந்நாட்டுத் தொடர்புநம் அரசனை அடைந்ததோ?
அதனால் அவர்கள் அருமை நாட்டில்
காலடி வைத்துக் கலகம் விளைப்பரோ!

குமரிக் கடலில் இக்குறிஞ்சி நாட்டை
அயலார் அண்டா திருக்கும் வண்ணம்
கடற்சுழல் பலப்பல காத்து வருவதை
தாம்பெற்ற பேறென நவில வேண்டும்
நம்கடல் கடக்க நாயே அறிவோம்
பிறர்அறி யாரிது பெரும்பே றன்றோ?
மன்னர் அடிக்கடி மறுபுலம் செல்வதால்
செழித்த குறிஞ்சித் திட்டுக்கு வரும்வழி

அயலார் அறிந்து கொள்ளவுங் கூடுமே!
இன்றும் வராதநல் மன்னர் மற்றொரு
நாட்டிலோர் மூலையில் நல்லுரு மாற்றி
வருந்தத் தானே வேண்டும்? வாழ்வில்
துன்ப நிழலையும் சுவைத்தறி யாத
அரசர்க் கிந்த அல்லல்ஏன்? என்று
சேந்தன் உரைக்கையில் சேர்ந்த அக்குடிகளின்
கண்ணீர் மற்றொரு கடலைச் செய்தது.

அழுத படியே அமைச்சன் உரைப்பான்;
''மன்னன் திரையன் மக்கள் கருத்துக்கு
மாற்ற மாக மறுநாடு பல்முறை
சென்றுவந் துள்ளான்! மூன்னாண்ட மன்னர்
எவரும் பிறநாட்டுக் கேகிய தில்லை.
இவள்தந் தைக்கும் இவன்பாட்ட னுக்கும்
அமைச்சன் நான்! அவர்கள் நல்லவர்;
அவர்வழி வந்த அரசன் இப்படி!
மன்னனின் தவறுகள் என்னால் நேர்ந்தன
என்று நானிலம் இயம்புமே! இதனை
எண்ணுந் தோறும் என்னுளம் துடிக்கும்.

மன்னி மல்லிகை நாள்தொறும் கடற்கரை
வந்துவந்து பின்னர் வாரா மைக்கு
நொந்து நொந்து நோயுற் றதனால்
இன்று வரவும் இயலாமை உற்றார்.''
என்று முதிய அமைச்சன் இயம்பவே.
உடல்கு லுங்க அழுதனர் உள்ளவர்!
கடலும் கதறி அழுதது! அப்போது
வண்ணம் பலப்பல ஆக வானில்
புறாக்கள் பறந்தன கண்டார் பல்லோர்
'புறாக்கள் புறாக்கள்' என்று
சிறாரொடு பிறரும் செப்பிஆர்த் தனரே.

## பிரிவு—3

புறாக்களைச் சேந்தன் ஏன் என்று குரல் கொடுக்க, புறா ஒன்றின் காலில் வரும் அஞ்சலால் கப்பல் வரும் செய்தி தெரிகிறது.

### அறுசீர் விருத்தம்

வானத் துக் கடலை நீந்தி
மணற்கரை அடைந்து தங்கள்
ஊனக்கண் ணாற்கு றிஞ்சி
யூர்நோக்கி அறிவி னாலே
தீனிநா டோறும் போடும்
சேந்தனை நோக்கச், சேந்தன்.
ஏன் என்றான் புறாக்கள் எல்லாம்
இணைந்தன இணை அடிக்கீழ்!

'அன்பரீர் குறிஞ்சித் திட்டை
அடைந்தென் கப்பல்'—என்ற
பொன்னான அஞ்சல் தன்னைப்
புறாக்காலில் பெற்றான் சேந்தன்!
இன்பத்துக் களவும் உண்டோ
இவ்வுரை கேட்டார்க் கெல்லாம்!
'மன்னனைப் பெற்றோம் எல்லாம்
வரப்பெற்றோம்' என ஆர்த் தார்கள்.

பிரிவு—4

கப்பல் வந்தது. அக் கப்பலிலிருந்து அரசன் வந்திறங்கினான். அரசனோடு பலர் வந்திறங்கினார்கள்.

அறுசீர் விருத்தம்

தோன்றிற்றுக் கப்பல்! உள்ள
தோணிகள் நிறையப் பல்லோர்
ஏன்றநல் லுடைக ளோடும்
இறங்கினர்; கரைக்கு வந்தார்!
கோன்வரக் கண்டார் மக்கள்
கொள்ளாத மகிழ்ச்சி கொண்டார்.
"ஏன் பிறர்? இவர்கள் யாவர்?"
என்றனர் பிறரைக் கண்டே.

முறுக்கேறும் மீசை யோடும்
முத்தேறும் தலைக்கட் டோடும்
நிறுக்காமல் தங்கம் கொண்டு
நிறுவிய படிவம் போன்ற
செறுக்கான ஓர்இ ளைஞன்
திரையனின் முதுகில் தன்னை
மறைத்தானாய் நடந்து வந்தான்
மற்றுமோர் இளைஞ னோடே.

சிவாநந்தர் சிவசம் பந்தர்
சிவகிரிப் புகையி லைமேல்
அவாநந்தும் வாய ராகி
அடைப்பைகொள் கைய ராகிப்
பவாநந்தர் கடையில் விற்கும்
பட்டணம் பொடிய ராகி
இவாநம்ப வாளா இல்லே
அவாளார்என் றங்கு வந்தார்.

நெற்றியில் மார்பில் தோளில்
நெடுங்கழுத் திற்சுண் ணாம்பு
பற்றிடப் பூசிச் செம்மண்
கோடுகள் பாய்ச்சி மூளை
அற்றான்போல் வான்ப ருந்தை
அரிகரீ என்றண் ணாந்து
மற்றுமோர் பேதை நானும்
மனிதன்தான் என்று வந்தான்.

பனம்பூவின் சுமைபோல் மேலே
பழுமயிர்க் கற்றை தூக்கி
இளம்சேரக் கொட்டை மாலை
எழிற்சாம்பல் மேல ணிந்து

முழந்தொங்குந் தாடி மீசை
முழக்காதில் வளையம் தோன்ற
மனிதன்நான் அல்லன் என்றோர்
மடத்தம்பி ரானார் வந்தார்.

பிரிவு—5

(எதிர்கொண்டழைக்க வந்திருந்த அமைச்சன் முதலியவர்களை நலம் கேட்க, அவரவர்கள் விடை கூறுகின்றார்கள்.)

அறுசீர் விருத்தம்

அமைச்சனை நோக்கி மன்னன்,
"அனைவரும் நலமா?" என்றான்.
அமைச்சன், "நம் தொழிலா ளர்கள்
அழுகின்றார்" என்று ரைத்தான்.
"இமைப்பினில் தீர்ப்பேன்; நாட்டில்
மழைஉண் டா?" என்றான் வேந்தன்.
"அமிழ்தொரு துளியும் இல்லை"
என்றனன்; அறைவான் பின்னும்:

"அயல் நாடு சென்ற தொன்றே
அடுக்காத செயல்; அதன்மேல்
செயல்நாடி வாழ்கி லாத
திராவிட நாடு செல்ல
முயன்றனை! அந்த நாட்டின்
முற்றிய முடிச்சு மாறிப்
பயல்களை உடன ழைத்து
வந்தது பழுதே" என்றான்.

அமைச்சனிவ் வாறு கூறக்
கெஞ்சின அரசன் கண்கள்!
"நமக்கெலாம் நலமே அந்த
நல்லவர் வருகை யாலே!
தமிழுக்கும் திருத்தம் நேரும்
தமிழ்ச்சான்றோர் வருகை யாலே!
அமிழ்தினை நஞ்சென் னாதீர்
அமைச்சரே" என்றான் மன்னன்.

"அழுகையைச் சிரிப்பாக் கிற்று
நின்சொற்கள் அரசே, செத்த
கழுதைகள் நிலந்தி ருத்தா!
கள்ளிகள் ஊர்தி ருத்தா!
விழற்காடு நீர்தி ருந்தா
குழவியும் திருந்தி வாழும்
குறிஞ்சியைத் திருத்தல் உண்டா?

"தமைஎலாம் உணர்ந்தோர் என்று
சாற்றுமிக் குள்ளர் வந்து
நமைஎலாம் திருத்து தற்கு
நம்மிடம் என்ன உண்டு?
சமம்யாரும் என்கின் றோம்நாம்
நாமிதைத் திருத்தி விட்டால்
நமதடி நண்ணி னோர்க்கு
நாமடி யார்கள் அன்றோ?

"அன்பினால் தன்தோ ளின்கண்
ஆழ்வார்கள் வாழ்வா ரென்னும்
வன்பனுக் கடியார் வந்து
திருத்தஇங் கென்ன உண்டு?
இன்பொருள் ஒன்றே என்போம்
இதையவர் திருத்தி விட்டால்
அன்றொடு நாம்அன் னாரின்
அடியார்க்கும் அடியா ரன்றோ?

"கெடானையும் கெடுப்பான் கையில்
கிட்டானைத் தொலைக்கச் செய்வான்;
அடாதன செயமுற் கூட்டி
அதிகாரி அடியில் வீழ்வான்;
கடாவெட்டி விழாத்தொ டங்கக்
கட்டளை இடுவான்; மக்கள்
இடருற வடமொ ழிக்கே
இடந்தந்து தமிழைக் கொல்வான்!

திருநெறி வகுக்க வேண்டிச்
சிவன்பணித் தானாம்! இந்த
ஒருநரி இங்கு வந்து
திருத்திட என்ன உண்டு?
இருள்நீங்கக் கல்வி வேண்டும்
எனும்கொள்கை இங்கே உண்டு.
திருத்திட்டால் மகவைக் கொன்றே
சிறுதொண்டர் ஆவோம் அன்றோ?"

எனச்சொல்லி முடித்தான்! - ஆங்கே
இதுகேட்ட திரைய மன்னன்,
"இனிஒன்றும் பேச வேண்டாம்;
என்தந்தை தந்தை தந்தை
இவர்க்குநீர் அமைச்ச ராகி
இருந்தனிர் ஆத லாலே
சினமதை அடக்கிக் கொண்டேன்.
செல்லுக" என்று சொன்னான்;

"மாந்தர்கள் அமைதி யாக
வாழுகின் றாரா?" என்று
சேந்தனை மன்னன் கேட்டான்.

"சிவக்கின்றார் நெஞ்ச மெல்லாம் !
ஆந்தைக்கண் அவர்க ளின்கண் !
வேந்தரே, அவர்கள் தொல்லை
விலக்குக !" என்றான் சேந்தன்.

"ஆகட்டும்" என்று சொல்லி,
வந்தவர் அனைவ ரோடும்
வாகிட்ட என்று கூறி,
"வந்திட்ட வண்டி ஏறிப்
போகட்டும் தரும இல்லம்"
எனக்கூறிப் போனான் வேந்தன்
வாய்கட்டி மனத்துள் திட்டிச்
சென்றனர் மக்கள் யாரும்.

பிரிவு—6

(அரண்மனையில் அரசி மல்லிகையின் தோழியாகிய தாமரை, அரசன் நேரே அரண்மனைக்கு வருவான் என்று எண்ணி எதிர்பார்த்திருக்கிறாள்.

அறுசீர் விருத்தம்

பறந்துகொண் டிருந்தாள் தோழி
மன்னவன் வரவு பார்த்தே
இறந்தாள் போல் இருப்பாளான
அரசிமல் லிகையி டம்போய்ப்,
"பிறந்தாற்போல இதோவந் திட்டார்
செத்தாரா கியபி ரானார் !
வறண்டநெஞ் சால்அத் தானை
வரவேற்று மகிழ்க!" என்பாள்.

தெருப்புறம் விரைவாள் வேந்தர்
தென்னண்டைத் தெருக்க டக்க
ஒருநொடி போதும் அன்னை
உடைபூண வேண்டும் என்று
விருப்புடன் மகளிர் இல்லம்
ஓடுவாள் ; விரைவில் மீள்வாள் ;
மரத்திரு கிளைக்கு மாறும்
மணிச்சிட்டே ஆனாள் தோழி.

"வரட்டும்அவ் வஞ்ச நெஞ்சர் !
வரவேற்கு மோஎன் தோள்கள் ?
ஒருபேச்சுப் பேசு மோஇவ்
வொண்டொடி செவ்வாம் பல்வாய் ?
சிரிக்கட்டும், கெஞ்சி டட்டும் !
செந்தமிழ்க் காதற் பாட்டை
வருத்தட்டும் ! எனைப்பன் னாட்கள்
மறந்தாரை நானா ஏற்பேன் ?"

எனமன்னி கூந்தல் நீவி
எதிரிற்கண் ணாடி பார்த்துக்
கனியிதழ் கடையில் மின்னும்
குறுநகை தனைம றைத்துப்
புனையணி உடைதி ருத்திப்
புதுநிலா முகில்விட் டாற்போல்
தனிவந்து தன்கண் ணாளன்
தாண்டும்முற் கட்டில் நின்றாள்.

முற்கட்டில் நின்ற மன்னி
முகம்வாடி அங்கு வந்த
"விற்புரு வம்சேர் கண்கள்
மின்னிடை கன்னற் பேச்சுப்
பொற்புறு தோழி, உன்றன்
பூரிப்புக் குறைந்த தென்ன?
பிற்போக்கு நேர்ந்த துண்டோ?
ஆகையால் பேசி டாயோ?

"மன்னவர் வருகின் றாரா?
வரவில்லை யோடி?" என்றாள்.
"அன்னையே மன்னர் தாமும்
அயலாரும் வந்த வண்டி
நன்னீரில் குருகு போல
நம்மனைப் பாங்கில் வந்து
வன்குரற் கழுதை யாகி
வடபுறம் மறைந்த" தென்றாள்.

தோழிதா மரைஇவ் வாறு
சொன்னது கேட்ட மன்னி,
"பாழாயிற் றவரைப் பார்க்கப்
பறந்தஎன் ஆசை! என்னை
வாழத்தான் வைத்தா ரா?என்
மதிப்பைத்தான் காத்திட் டாரா?
ஆழிசூழ் உலகில் எங்கே
அடுக்குமிக் கொடுமைக் கூத்தே?

"அரண்மனை தனைத் தாண்டிற்றா
அவர் வண்டி? உள்ளே மன்னர்
இருந்தாரா? பார்த்தா யாநீ?
என்னை ஈ தென்ன?" என்றே,
அரசிதன் மகளிர் இல்லம்
அடைந்தனள்! குறிஞ்சி நாட்டார்
அரசர் ஏன் தரும இல்லம்
அடைந்தாரென் றுள்ளம் நைந்தார்.

## பிரிவு—7

(அரசனும் அரசனுடன் வந்த அயலாரும் தரும இல்லத்தில் இன்ன செய்கிறார்கள் என்பது.)

தருமஇல் லத்தைச் சார்ந்த
தனியொரு மலர்வ னத்துள்
திரையனும் கூட வந்த
சிறுவனும் மேடை ஒன்றில்
இரண்டுடல் ஒன்றாய்த் தோன்ற
இணைப்புறக் குந்தி மாலைப்
பருவத்தில் தோய்ந்தா ராகிப்
பருவுடல் காணார் ஆனார்.

"நவலந் தீவின் தென்பால்
நன்றான சென்னை விட்டு
யாவரும் காணா வண்ணம்
இரவினில் படகில் ஏறி
நாவாயை நடுக்க டற்கண்
நாம்பெற்றே அதைச்செ லுத்திக்
கூவெனக் குயில்கள் கூவும்
குறிஞ்சித்திட் டடைந்தோம் இன்றே!

"மூன்று நாட் கப்ப லோட்டம்
மூட்டிய உடலின் நோயை
வான்தொடும் பச்சைப் பந்தர்
மலர்வனம் தீர்த்த" தென்று
தேன் சுவை மொழியான் அந்தச்
செம்மலும் உரைத்தான்! மன்னன்.
"மான்விழி யாளே" என்று
வாய்ப்பேச்சுத் தொடங்க லுற்றான்.

"பெண்ணென்றே என்னை நீங்கள்
பேச்சிலும் குறிக்க வேண்டாம்.
நண்ணும்ஆண் உடையை நீக்கி
நானொரு பெண்ணே என்னும்
உண்மையை வெளிப்ப டுத்த
ஒண்ணுமோ? துறைமு கத்தில்
கண்ணேதிர் கண்டேன் நாட்டார்
காட்டிய உள்ளப் பாங்கை.

"அயலார் வருகை ஓர் 'தீ'
அதிலும்ஓர் பெண்ணை மன்னர்
மயலாகிக் கொணர்ந்தார் என்ற
மறைவுமே தெரிந்தால். அத்தீ
புயலோடு கலந்த தாகிப்
புரட்சியைச் செய்தல் திண்ணம்.
வெயில் கண்டேன் அமைச்சன் சொல்லில்;
வேல்காணேன் வேந்தர் கையில்.

"ஏசினான் அமைச்சன் எம்மை
எதிரினில் இருந்தீர் நீவிர்!
கூசினீர் இல்லை, தேளின்
கொடுக்கினை நசுக்க வில்லை;
ஆசைக்கு முடிசு மந்தீர்,
ஆட்சியை அவன்பால் தந்தீர்;
வீசிடும் வாள்சு மந்தீர்,
வெட்டுவோன் அமைச்சன் போலும்!"

என்றனள் விநோதை! மன்னன்
எழுந்தனன் தன்தோள் தட்டிக்
"குன்றாத சுவைக்க ரும்பே
குறுக்கிட்டு நம்மின் பத்தை
என்றேனும் தடுப்பா ராயின்.
அன்றேநான் அவரை மாய்ப்பேன்
அழகியே இன்னும் கேட்பாய்.

"நாவலந் தீவி லேதென்
நாட்டிலே சென்னை என்னும்
மேவிய நகரி லேஅவ்
விரிகடற் கரையி லேஇ
ராவிலே பகலைச் செய்யும்
இன்முழு நிலவி லேபூங்
காவிலே மயிலே போல்என்
கண்ணிலே அழகைச் செய்தாய்.

"உனைக்கூட்டி வந்த நற்சி
வானந்தர் சிவசம் பந்தர்
எனைக்காட்டித் தொலைவில் நின்றார்.
நீவந்தென் எதிரில் நின்றாய்
'தினைக்காட்டுக் கிளியே' என்றேன்.
தோளிலே வந்து சாய்ந்தாய்;
பனைக்காட்டில் இணைந்த அன்றில்
பறவைகள் ஆனோம் நாமே!

"இன்றைக்குப் பெற்ற இன்பம்
என்றைக்கும் பெறுதல் வேண்டும்
நன்றொத்து வாழ வேண்டும்
'நாம்'" என்றாய் வினோதா; நானோ,
'என்சொத்து நின்சொத்' தென்றேன்;
'என்னுயிர் நின்ன' தென்றேன்;
'என்னுடல் நின்ன' தென்றேன்;
என்னுளம் உனக்கே தந்தேன்!

"உனக்கொரு தீமை நேர்ந்தால்
உயிர்தந்து காப்பேன்! மண்ணில்
எனக்குநான் வாழ வில்லை
இங்குனக் கேவாழ் கின்றேன்;

நினைக்காதே எனக்கெ திர்ப்பு.
நினைப்பவர் எவரு மில்லை;
பனிகண்டால் நடுங்கும் அந்தப்
படுகிழம் சொல்எண் ணாதே!

"என்னாசை தான்இந் நாட்டின்
எல்லாரின் ஆசை யாகும்."
தின்னத்தெ விட்டா இன்பத்
தேன்அளாம் தினையின் மாவே!
உன்னைத்தான் நான்வி யந்தேன்;
ஊரினர் இதைஅ றிந்தால்,
என்எண்ணம் ஆத ரிப்பார்;
எந்நாளும் தொழுவார் உன்னை!

"அமைச்சன்சொல் அறிவி லான்சொல்;
ஆயினும் விடென் அன் னோனை!
நமக்கன்றோ குறிஞ்சி நாடு!
நமக்கன்றோ குறிஞ்சிச் செல்வம்!
சுமைக்கும்அக் கழுதை கட்கும்
தொடர்பில்லை; அதுபோல் நாட்டார்
தமக்கும்இந் நாட்டின் செல்வம்
தனக்குமோர் தொடர்பு மில்லை.

"என்விருப் பந்தான் சட்டம்;
என்அடி மைகள் மக்கள்!
பொன்னேநான் இதனை எல்லாம்
எதற்காகப் புகன்றே னென்றால்,
உன்னைநீ ஆணு டைக்குள்
புகுத்தினாய்; ஒளியைச் சேற்றில்
மன்னிடைச் செய்தாய்! அஞ்சேல்.
மாசிலா நிலவாய் நேர்நில்.'

"தலைக் கட்டை நீக்கு! கூந்தல்
சரிக்கட்டும்! மீசை தன்னை
விலக்கிட்டு மேல்கீழ்ச் சட்டை
மறைப்பிட்ட தைவெ ருட்டு!
நலக்கிட்ட உட்பட் டாடை
திருத்திட்டுக் காதல் சேர்த்துக்
கலக்கிட்ட இதழின் சாற்றை
பசிக்கிட்டு களிப்பிற் கூட்டு."

சொன்னான்இவ் வாறு மன்னன்
தோகைதான் நாணிக் கோணிப்
புல்லிதழ் விலக ஆங்கே
பொன்னிதழ் காட்டி டும்செவ்
வல்லிஆ கின்றாள்! ஆக
வந்தனன் அதேநே ரத்தில்
சில்லிமூக் கப்பன் என்பான்
திடுக்கிட்டாள் மங்கை கண்டே!

"நாணப்ப டாதே பெண்ணே!
நம்மரண் மனைப் பணிக்கு
வாணாளை ஈந்தோன் இந்த
மனிதன் பேர் சில்லி மூக்கன்
வீண் ஐயம் இவனி டத்தில்
உனக்கொன் றும் வேண்டாம்; நெஞ்சம்
கோணுதல் இல்லான். உன்றன்
கொள்கைக்கு மாறு செய்யான்!"

திரையன்இவ் வாறு கூறிச்
சில்லியை நோக்கி, "நீபோய்த்
தெருவினர் உள்வ ராமல்
திறம்படக் காவல் காப்பாய்;
வராதேநீ இனியும் இங்கே"
என்றனன் சில்லி சொல்வான்;
"வருவேனோ வராத செல்வம்
வந்துசேர்ந் திட்ட தன்றோ?"

"அரசியே உன்போல் நல்ல
அழகொன்று வேண்டு மென்று
கருதியே தவங்கி டந்தார்;
கடைசியிற் பெற்றார் உன்னைத்
தரத்தினில் மிகவு யர்ந்த
சரக்குநீ! இதற்கு முன்னே
அரசர்க்கு மனைஒ ருத்தி;
அவள்அழ கிலாதாள்!" என்றான்.

ஆடையைத் திருத்தும் கைகள்
அதிர்ந்தன வாய்இ தழ்கள்
முடிய நிலைஉ டைத்தே
'ஆ!' என்றோர் முத்து டைக்க-
நீடிய சினத்தால் வேந்தன்,
"நிறுத்துடா!" என்றான் சில்லி.
"தேடரும் செல்வ மாக
அரசர்க்கோர் மகன்தான்' என்றான்.

சில்லிதான் இந்தப் பேச்சை
முடிக்குமுன் திகைத்த வேந்தன்;
'இல்லைஅப் பையன்" என்றான்.
"ஆமாம் தன் மாமன் வீட்டில்
வில்லேந்து கல்வி..." என்று
விளம்பினன் சில்லி! மன்னன்
"கல்விகற் றிருந்த பையன்
கண்மூடி..." என்று சொன்னான்!

கண்மூடித் திறக்குமுன்னே
கடிதேகி, "அருமை மாமன்
தண்நீழல் விளாமா வட்டம்
தான்சென்றே ஆசை யோடும்

எண்ணிலாக் கலைப யின்றே
இருக்கின்றான்; இந்தச் செய்தி
திண்ணமே'' என்றான் சில்லி!
திருடனாய் விழித்தான் மன்னன்.

''மிகநன்றி சில்லி யப்பா
போ'' என்று விநோதை சொல்ல.
''மகளேநாள் வருகின் றேன்போய்
வருகின்றேன்!'' என்று சென்றான்
''மகிழ்ந்திட எனக்கே இன்னும்
மணமாக வில்லை என்றீர்!
உகுமலர்க் குறிஞ்சி சென்றே
உனைமணந் திடுவேன் என்றீர்.

''உன்வயிற் றிற்பி றக்கும்
பிள்ளைக்கே உரிய தாம்இப்
பொன்வயற் குறிஞ்சி', என்று
புளுகினீர்! இனிநான் வாழேன்;
என்கழுத் தறுத்துக் கொள்ள
ஓர்கத்தி இருந்தால் தாரீர்.
பின்புநான் இறந்த தைஎன்
பெற்றோருக் கறிவிப் பீர்கள்!

இன்னலில் மாட்டிக்கொண்டேன்.
வாழ்வதில் இனிமை இல்லை''
என்றுதன் முகத்தை மூடி
'ஏ' எஉன்று கூச்சலிட்டான்.
புன்தொழில் விநோதை தன்னைப்
புரவலன் நெருங்கிப் பற்றி.
''அன்பேஎன் பிழைபொ றுப்பாய்
அனைத்தும்நின் உடமை? என்றான்

அரசன் மேலும் கூறுவான்...
''பெண்டாட்டி இருந்தால் என்ன?
பிள்ளைதான் இருந்தால் என்ன?
திண்டாடத் தானே வேண்டும்?
திருவிளக் கேநீ என்னால்
கொண்டாடப் படுவ தேமெய்!
குறைவுக் கொன்று மில்லை
அண்டையில் வா! அதோபார்
ஆண்சிட்டின் ஆடல் பாடல்!''

என்றனன் திரையன்; கண்டாள்.
''இதுதானா ஆடல் பாடல்?
குன்றாத காத லால்ஆண்
கொஞ்சுதல் குலாவுதல் அன்றோ?''
என்றனள் விநோதை! மன்னன்
இன்முகம் நோக்கி நின்றான்!

அன்னவன் தோளிற் சாய்வாள்.
அரசனை நோக்கிச் சொல்வாள்!

## எண்சீர்விருத்தம்

''கல்லிலிருந்து மெய்வருத்தும் கடியதிண்ணை
கடந்திடுவோம் அத்தான்!'' என்றுரைத்தாள் நங்கை
"மல்லிகையின் புதர்நடுஓர் மலர்ப்ப டுக்கை
அதோஅதுதான் வேண்டுமா! மங்கை யேபார்!
புல்வளர்ப்புத் திரைநடுவில் குளிர்ச்சி மிக்க
புதியதா மரைஇலைகள் பரப்பி வைத்த
நல்லவிடுதி தேவையா? மாங்கி ளைகள்
நாற்புறமும் புடைசூழப் புட்சி றைகள்

''பரப்பியதோர் படுக்கைஅதோ தேவை தானா?
பாய்புலியின் தோலுரித்துப் பதப் படுத்தி
நிரப்பாக நாற்புறமும் மான்தோல் தட்டி
நிறுவியதோர் தனிஅறையும் பாராய் பெண்ணே!
கரடித்தோல் ஆட்டுத்தோல் படுக்கை யும்பார்!
கைகாரர் பின்னிவிட்ட வலையூஞ் சல்கள்
மரப்பந்தர் இடைத்தொங்கும்; அவற்றின் நாப்பண்
மரவுரியும் மெத்தென்று போட்டி ருக்கும்.

''எதுதேவை எனக்கேட்டான் மன்னன்!' மங்கை
'என்நாட்டில் கற்சுவரின் கட்ட டங்கள்
மதிப்படைவ தல்லாமல் இலைப்ப டுக்கை
மலர்ப்படுக்கை முதலியவை கொள்வ தில்லை:
புதுப்போக்கைக் காணுகின்றேன் இங்கே'' என்றாள்
''பூங்காவை அடுப்பெரிப்பார் அந்த நாட்டில்
உதைத்தெழுந்து வானளாவும் காடு கண்டால்
ஒன்றாக்கக் கரிசுடுவார் அந்த நாட்டில்;

'வெயிலவடித்து நிழல்பொழியும் தழைம ரங்கள்
வீண்என்று சொல்லிடுவார் அந்த நாட்டில்!
குயில்கூவும் வயற்புறங்கள் அங்கே இல்லை
குள்ளநரி ஊளையிடும் அந்த நாட்டில்!
மயிலாடும் சோலையின்கீழ்த் தெருக்கள் இல்லை!
வடுப்பன்றி அடிக்கீழே தெருக்கள் காணும்;
அயலின்றி இருநெருப்புச் சட்டி தீய்க்கும
அப்பங்கள் அங்குள்ள கட்ட டங்கள்!

மேலும்கீ ழும்கொதிக்கும்! வீட்டுக் குள்ளும்
மின்இயக்க விசிறிகளும் அனலைத் தள்ளும்!
ஆலுமர சும்விளவும் மாவும் இல்லை;
ஆற்றோரம் காற்றில்லை; அனைத்தும் பாலை.
ஏலுமோ உன்னாட்டில் இயற்கை தந்த
இவ்வகையாம் விடுதிகளின் அழகு கொள்ளல்?
வேலைப்பா டமைந்த கட்ட டங்கள்
மிகவும்உள அந்நாட்டில் அவைகள் எல்லாம்.

"தேவைக்காம் அளவினவாய் அமைந் திருக்கும்,
சேர்குடும்பப் பொருளெல்லாம் மழைப டாமல்
வாழ்வதற்கே வீடல்லால் நிலப்ப ரப்பை
வளைக்க அல்ல வீடுகட்டல் குறிஞ்சி நாட்டில்!
காவலனார் கொலுவிருக்கை ஆலின் கீழே
கடற்கரையில் பூங்காவில் இன்ப வாழ்க்கை!"
..............................................................
....................................—......................

இதுகேட்ட விநோதைதான் அதோஅஃ தென்றாள்;
ஏறினார் இருவரும் விடுதி தன்னில்
புதுப்பாடல் தொடங்கிற்று வண்டின் கூட்டம்!
பொருந்த அதிர்ந் தனமுழவு குயிலின் கூட்டம்,
உதிர்த்ததுவே மலர்ப்பொடியை மென்மைக் காற்றும்
தோகைமயில் ஆடக்கண் டுவகை யாகிக்
கொதித்ததுபெண் மயில்! காதல் தீக்குத்தக்
குதித்தனஇன் பக்குளத்தில் ஆணும் பெண்ணும்!

## பிரிவு—8

(மறுநாட் காலை தரும இல்லத்து நீராடு விடுதியில் விநோதை குளிக்கிறாள். மன்னன் அவளுக்கு முதுகு குழப்புகிறான். அதன்பின் விநோதை போ என்று கூற மன்னன் ஒரு புறம் போகின்றான்.)

குளித்துக் கொண்டிருக்கிறாள் மறுநாட் காலை!
குழப்பிக்கொண் டிருக்கிறான் மன்னன் அன்னாள்
ஒளிப்பான பொன்முதுகை விடைகொ டுத்தாள்
"ஒருபுறத்தில் விலகிடுக" எனும்சொல் கேட்டுப்
புளிப்பாகி ஒருமாவின் அடியிற் குந்திப்
புறப்பட்டு வரும்கிளிக்குக் காந்தி ருந்தான்.
வெளிப்பட்ட தாமரையாள் என்னும் தோழி
விரைந்துவந்து மன்னனிடம் கூறு கின்றாள்;

"அயல்நாடு சென்றதுவும் அறமோ ஐயா?
ஐம்பதுநாள பிரிந்ததுவும் அறமோ ஐயா?
அயலாரோ டிங்குவந்த தறமோ ஐயா?
அரண்மனைக்கு வாராத தறமோ ஐயா?
துயிலாமல் உண்ணாமல் உம்மை எண்ணித்
துயர்நெருப்பில் துடிப்பாளை மறந்தீ ராகி
அயலவர்பால் தருமஇல்லம் தன்னில் தங்கி
அகத்தன்பை உகுத்ததுவும் அறமோ ஐயா?

"மனவிருப்பம் போல்நடத்தல் அறமோ ஐயா?
மனைவிருப்பம் அறியாத தறமே ஐயா?
இனவிருப்பம் மதியாமை அறமோ ஐயா?
இடவிருப்பம் இல்லையோ அவளுக் கின்பம்?

புனல்விருப்பம் உள்ளதொரு பூங்கொ டிக்கே
புதுநெருப்பை வேரிலிடல் விருப்ப மானால்,
தனிவிருப்பம் வேறொருத்தி இடத்தில் தானோ?
சற்றிதனைக் கேட்டுவரச் சொன்னாள் மன்னி.

''உடலினின்றும் உயிர்பிரிந்தால் அவ்வுடற்கோ
உணர்வில்லை; ஆதலினால் துன்பம் இல்லை.
தொடல்இன்றிக் கைபிரிந்தால் துன்பம் தாளாத்
தோகையினை நீர்பிரிந்தால், அந்தத் தோகை
விடல்தகுமோ? விட்டாலும் உணர்வுநீங்கா
மெல்லுடலும் நல்லுயிரும் துன்புறாவோ?
கடில்நடுவில் கையோய்ந்து போன காதற்
கரும்புதனைக் கரையேற்ற வாரீர்!'' என்றாள்.

**அடுத்து அரசன் சொல்லுவது :—**

'',காதலுக்கோர் கரைகாணத் துடித்த மன்னி,
கடற்கரைக்கு வரவேற்க வரவே யில்லை;
சாதலுற்றால் எனக்கென்ன? சாத லின்றித்
தளர்வுற்றால் எனக்கென்ன. பிரிந்து நெஞ்சம்
மோதலுற்றால் எனக்கென்ன. நெடும்பூச் சாண்டி
மொழிதலுற்றால் எனக்கென்ன? வரவே மாட்டேன்!
போதோழி போதோழி அவளி டத்தில்
புகலுவாய் என்சொல்லை'' என்றான் மன்னன்.

**தோழி உரைப்பது :—**

போகின்றேன்; உடனழைத்துப் போக வந்தேன்
போகின்றேன்! வரேனென்றார் என்று ரைக்கப்
போகின்றேன்! போகாத உயிரைப் போக்கப்
போகின்றேன்! அவள் இறந்தால் நான்சா கத்தான்
போகின்றேன்! ஓர் ஐயம்! அதையும் கேட்டுப்
போகின்றேன்! கேட்கவா!'' என்றாள் தோழி.
''போகின்றேன் போகின்றேன்!! என்று ரைத்தாய்
போகவில்லை அதையும்நீ புகல்வாய் என்றான்.

**அடுத்துத் தோழி கூறுதல் :—**

''அரசாங்க ஆட்சிஅங்கே அரசி அங்கே
அரசியினால் வரும்பெருமை அருமை அங்கே
வரிசைஅங்கே வாழ்வங்கே விருப்பத் திற்கு
வாய்ப்பான உணவங்கே மங்கை அன்பின்
முரசமங்கே உண்டன்றோ? ஏது மில்லா
முதியோாக்குச் சோறுதரும் இல்லம்
சரிஎன்று சப்பணம்போட் டுட்கார்ந் தீரே
காரணந்தான் சாற்றுவிரோ? என்று கேட்டாள்!

அடுத்து அரசன் சொல்லுவது :—

"உலகத்தின் தோற்றம்நிலை இறுதி ஆன
ஒருமூன்றின் தனிமுதலை உணர்தல் வேண்டும்:
சிலபெரியோர் என்னுடன் வந்திருக்கின் றார்கள்
செல்வமெலாம் சிறப்பெல்லாம் பெற்றேன் மற்றும்
உலர்ந்தமலர் உதிர்த்தனைய உடம்பு பெற்றேன்.
என்னபயன்? உண்மையினை உணர்தல் வேண்டும்
நவமில்லை மாதர் தரும் இன்பம் தோழி!
நடஎன்றான்!" நல்லதென நடந்தாள் தோழி!

தனித்தவளாய் அரண்மனையின் மகளிர் இல்லம்
அடைந்திட்ட தாமரையை மல்லி கைதான்
"எனைத்தழுவும் பதைபதைப்பால் அந்த மன்னர்
இனிவருவ தாய்ச்சொல்லி உனை அனுப்ப,
நனிமகிழ்ச்சி யோடுநீ வந்தாய் போலும்!
நடக்குமா உன்நினைப்பும் அவர்நி னைப்பும்?
சுனைப்புனலும் நானல்லேன் நாவ றண்டு
துள்ளுமான் எண்ணமெலாம் செல்லா திங்கே.

"அயல்நாட்டில் இத்தனைநாள் என்ன செய்தார்?
அயலாரை ஏனிழுத்து வந்தார்? வந்து,
புயல்தவழும் மாளிகைக்கும் அயலிற் சென்ற
புதுப்போக்கில் அவர்காட்டும் கதைப்போக் கென்ன?
கயல்விழிகொள் தாமரையே இவற்றை எல்லாம்
காவலரைக் கேட்டாயா? என்ன சொன்னார்?
நயம்படநீ உரைக்குமட்டும் திருந்த மாட்டார்
நறுக்காக நான்குசொற்கள் நவில வேண்டும்."

என்றுபல இயம்பினாள் மல்லி கைதான்,
'இல்லை! இல்லை, வரமாட்டேன் என்றார் மன்னன்,
மன்னவரைக் கடற்கரைக்குச் சென்று நாமே
வரவேற்க இல்லையன்றோ?'! என்றாள் தோழி.
தென்றலுக்கு நடுங்குகின்ற மரைஇ தழ்போல்
திருமேனி நடுக்கமுற்ற மன்னி, "ஐயோ
சென்றுவர வேற்காத சிறுபி ழைக்கா
செங்காந்த ளைவெறுக்கும் தங்க வண்டு?

"அமைவான நல்லுருவை அன்பு வாழ்வை
அடியோடு நீக்கிற்றா நான்பு ரிந்த
உமியளவு சிறுகுற்றம்? கடற்க ரைக்கே
ஒவ்வொருநா ளும்சென்றேன்; ஐம்ப தாம்நாள்
இமைநலிவால் போகவில்லை; கார ணத்தை
எனைக்கேட்டால் சொல்லேனா? அங்கி ருந்து
சுமத்துகின்றார் பெருங்குற்றம் என்மேல்! என்ன,
செய்வதிந்தத் தொல்லைக்கே? என்று கூறி,

சாய்வாள்போய்ப் பஞ்சணையில்! எழுவாள் பின்னும்
தலைதாழ்த்தி இதற்கென்ன செய்வேன் என்று

பாய்வாள்பின் தஞ்சாவூர்ப் பாவை யானாள்.
'வாய்வாளோ திரு!நாளை இரவு நாமே
மன்னனிடம் நேரேபோய் மன்னிப் பொன்று
ஓய்வாகக் கேட்கலாம்'' என்றாள் தோழி!
ஒண்டொடியும் ''சரி'' என்றாள், கண்ணீர்விட்டாள்.

மீண்டும்மன்னி பரபரப்போ டெழுந்திருந்து.
''மெல்லியே இதுகேட்பாய் என்நெஞ் சத்தைத்
தூண்டும்ஓர் எண்ணம்தான்! விளமா வட்டம்
சென்றுநீ தோகைஎன்றன் நிலையைச் சொன்னால்,
ஈண்டுவந்தென் உடன்பிறந்தார் என்துன் பத்தை
இல்லாமற் செய்வாரே'' என்றாள்! தோழி.
''வேண்டாம்என் அரசியே, வேண்டாம் வேண்டாம்!
விரைந்தோடி வந்திடுவார் திண்ண னாரும்!

''வெளியினின்று வந்தவரைக் கொலையே செய்வார்;
வேந்தரையும் தூக்கி அடிதிடுவார் மண்ணில்!
கிளிப்பேச்சுக் காரியே உன்றன் பிள்ளை
அங்குள்ளான் இங்கிதனைக் கேட்பா னாகில்
துளிப்பொறுக்க மாட்டானே! உன்றன் காதல்
துறைதூர்ந்து போகாதோ! மரக்கி ளைமேல்
தளிர்ஒன்றில் புழுக்கண்டால் வேரை வெட்டும்
தன்மைஅன்றோ உன் எண்ணம்.'' என்று சொன்னாள்.

''மன்னவரால் எனர்கென்ன நேர்ந்திட் டாலும்
மற்றவர்தாம் பெருந்தீமை இழைந்திட் டாலும்
அன்புடையாய் விளாவட்டம் ஆளு கின்ற
அண்ணனிடம் சொல்லவே கூடா தன்றோ?
அன்னவர்ஓர் பெருஞ்சினத்தர்; முரடர்; அங்கே
அவருடன்வாழ் என்பிள்ளை அவருக் கப்பன்;
மன்னிப்புக் கேட்டிடுவோம் மன்னர் இங்கு
வந்திடுவார் வந்திடுவார் பொறுப்போம்'' என்றாள்!

## பிரிவு—9

(குறிஞ்சித் திட்டைத் த அடியில் ஆழ்த்த வேண்டும். அதற்கு மதங்களைக் குறிஞ்சித் திரட்டில் பரப்ப வேண்டும். பரப்புமுன் மன்னனை மதத்தில் மூழ்கச் செய்ய வேண்டும். ஆதலின், விநோதை சிவாநந்தர் முதலியோர், மத விளக்கம் செய்கிறார்கள். தமக்குள் கருத்து வேற்றுமை உண்டாகிறது.)

### அகவல்

தருமஇல் லத்தின் பெருங்கூ டத்தில்
திரைய மன்னன், விநோதை, சில்லி
ஒருபு றத்தில் உட்கார்ந் திருந்தனர்.
சிவாஅ நந்தர் சிவசம் பந்தர்
இருவர் எதிர்ப்புறம் வீற்றி ருந்தனர்;
மடத்தம்பி ரானும் மாலுக் கடிமையும்

இடத்தில் ஒன்றும் வலத்தில் ஒன்றுமாய்
மாறு பட்ட மாடென அமர்ந்தனர்.
சிவாஅ நந்தர் மாணவ ரான
சிவசம் பந்தர் செப்பு கின்றார் :
''ஸ்ரீகை லாச பரம்பரை ஜன''
என்று துவக்கினார். இருந்த மன்னனுக்கு
ஏதும் புரிய வில்லை. அதன்மேல்,
''ஸ்மர்சனா நந்தமு சேயவல மீரு''
என்றதும் திரையன் இடைம றித்துத்
''தமிழில் பேசுதல் தக்க'' தென்றான் ;
''வெள்ளைத் தமிழிது'' என்றாள் விநோதை ;
'தமிழ்தான்'' என்று தம்பிரான் சொன்னான்.
மாலுக் கடிமை வலக்கை அசைத்தே.
''இல்லை இல்லை இல்லை இந்தியும்
தெலுங்கும் வடசொலும் தேடி அள்ளிக்
கல்கிக் கூட்டம் கலக்கிய சேறிது !

தம்பி ரான்கள் சருக்கிய வழிஇது !
சுதேச மித்திரன் தொடரும் நடைஇது !
கலைமகள் தேளின் கடுக்கும் கொடுக்கிது !
தினமணிப் பாம்பு திரட்டிய நஞ்சிது !
யானோ தென்கலை இலக்கியம் காட்டும்
வழியே சென்று பழியாப் பெரும்பொருள்
அடைய எண்ணும் அருமைத் தமிழன்''
என்றுதன் தூய்மையை எடுத்து ரைத்தான் !
மென்றான் பல்லைப் பல்லால் தம்பிரான் !

''தென்கலைப் பார்ப்பான் வடகலைப் பார்ப்பான்
சைவப் பார்ப்பான் எப்பார்ப் பாரும்
தமிழர் தலைதட வப்பார்ப் பாரே !''
தம்பிரான் இப்படிச் சாற்றிய வுடனே
சிவாஅ நந்தன் செப்பு கின்றான் :
''பார்ப்பனர் தம்மை இழிவு படுத்திடப்
பார்ப்பான் தன்னைப் பழிவாங் கிடுவேன்.
பார்ப்பனர் நான்முகன் படைப்பில் உயர்ந்தவர்

முதலில் நான்முகன் முகத்தில் வந்தவர் ;
அவன்தோளி னின்றே ஆளுவோன் வந்தான் ;
வசையுடன் இடுப்பில் வணிகன் வந்தான் ;
காலிற் பிறந்த கழிவிடை அல்லவோ
தறுதலை யான தம்பிரான் நீயே?''
என்றனன், தம்பிரான் இயம்பு கின்றான் :
''முகத்தில் பிறப்பதும் உண்டோ முட்டாளே ?
தோளிற் பிறப்பார் உண்டோ தொழும்பனே ?
இடையிற் பிறப்பார் உண்டோ கழுதையே ?
நான்முகன் என்பான் உளனோ நாயே ?
புளுகடா புகன்றவை எலாம்போக் கிலியே !

குறிஞ்சித் திட்டும் நாவலங் கூறும்
உள்ளிட்ட குமரி நாட்டினில் உற்றேன்.

எச்சிலைக் கண்ட இடத்து நக்கும்
நாய்போல் எங்ஙனோ இருந்து பிழைக்க
இங்கு வந்த இழிஞன் நீதான்!''
என்றனன் முடிக்குமுன்! ஏந்தல்,
''நாழிகை ஆனது நங்கை விநோதையே
வா'' என்று மையல் மிகுதியால் கூறினான்.
''இன்று பிரசங்கம் இல்லை'' என்று
விநோதை சொன்னாள்; வேந்தன், ''விநோதையே
பிரசங்கம் என்ற' பேச்சின் பொருள்தான்
விளங்கவில்லை'' என்று விளம்பினான்.
ஏதும் சொல்ல இயலா திருந்தாள்!
''பிரசங்கம் என்றால் உபந்யாசம்!'' என்று
சிவாஅ நந்தன் என்பான் செப்பவே,
அதுவும் புரியா தரசன் விழித்தான்.
சிவசம் பந்தன் செப்பு கின்றான்:

''உபந்யாசம் என்றால் உயர்ந்தோர் சொல்வது;
சொற்பொழி வென்பது தாழ்ந்தசொல்'' என்றான்.
எட்டித் தலையில் உதைத்தான் ஏந்தல்!
''சேவடி வாழ்க!'' என்றான் சில்லி!
''தமிழ்வாழ்க! என்று சாற்றினான் தம்பிரான்!
விநோதையும் வேந்தனும் ஒன்றை ஒன்று
பற்றிச் செல்லும் பட்டுப் பூச்சிகள்
போல எழுந்து சென்றனர்.
மாலைப் பொழுது வரவேற்ற தவரையே!

### பிரிவு—10

(தொழிலாளர்கள் தம் குறைகளை அரசனிடம் தெரிவிக்கின்றார்கள். சேந்தன் என்னும் படைத்தலைவன் அமைதி படுத்துகிறான்)

### அறுசீர் விருத்தம்

பஞ்சைநூ லாக்கும் ஆலைப்
பழந்தொழி லாளர் எல்லாம்
கெஞ்சினார் கூலி ஏறக்
கேட்டனர்; முதலா ளர்கள்,
மிஞ்சினார்: ''ஒப்போம்'' என்றார்
வேலையை நிறுத்தம் செய்து,
''கஞ்சிக்கு வழிசெய்'' கென்று
கழிறிடக் கோயில் வந்தார்.

கோயிலில் கோவும் இல்லை;
கோரிக்கை என்ன?'' என்று

வாயிலில் இருந்தோன் கேட்க,
வந்தவர், "மன்னர் எங்கே
போயினர்?" என்று கேட்டார்

"புகலுவீர் என்பால்" என்று
வாயிலோன் சொன்னான்; வந்தோர்
வாய்விட்டுச் சிரிக்க லானார்.

"மன்னவன் நீயோ?" என்று
மற்றங்கே ஒருவன் கேட்டான்.
"உன்னைப்போல் கூலிக் காரர்
உரைப்பதை நான் கேட்டுத்தான்
மன்னர்பால் உரைக்க வேண்டும்;
மற்றேதும் விளம்ப வேண்டாம்!
சொன்னாற்சொல், இல்லை யேல்போ!
என்றான் அவ் வாயில் காப்போன்!

"ஐயா யிரம்பேர் நாங்கள்!
ஒருவன்நீ ஆத லாலே
செய்வதை எண்ணிச் செய்க;
செப்பலில் எளிமை வேண்டும்.
துய்யது மீறி னால்நீ
துன்பத்தை அடைவாய்!" என்று
ஐயாயி ரம்பேர் தம்மில்
ஒருகுள்ளன் அறிக்கை செய்தான்;

அரசனார் சொன்ன தைத்தான்
அறிவித்தேன்? நான்துன் புற்றால்.
அரசனார் துன்பு றுத்தப்
பட்டார்என் றாகும் அன்றோ?
ஒருவனை ஒருகூட் டத்தார்
எதிர்ப்பதில் உயர்வே இல்லை
அரசரோ இங்கே இல்லை
இருப்பவர் அமைச்சர்1" என்றான்.

"அமைச்சரைப் பார்க்க வேண்டும்;
அனுமதி கேட்பாய்!" என்ன,
இமைப்பினில் வாயி லோன்போய்,
இவண்வந்து. "போவீர்!" என்றான்
"எமக்குற்ற குறைகள் கேட்பீர்"
எனத்தொழி லாளர் சொல்ல,
அமைச்சனார், "சொல்க?" என்றார்;
அறைகின்றார் தொழிலா ளர்கள்;

'மழையில்லை விளைவு மில்லை;
வாய்ப்பான உணவின் பண்டம்
பழமைக்குப் பத்துப் பங்கு
விலையேறப் பார்க்கின் றீர்கள்;

பிழையில்லை எங்கள் மேலே.
கூலியைப் பெருக்கச் சொன்னோம்;
விழவில்லை அவர்கள் காதில்,
வேலையை நிறுத்தம் செய்தோம்!
"ஆவன செய்ய வேண்டும்
அரசர்பால் எடுத்துச் சொல்லி!
தாவும்எம் குழந்தைக் கெல்லாம்
தாயிடம் பாலும் இல்லை!
ஓவெனக் கதறும் தாயார்
உயிர்க்காக்கச் சோறும் இல்லை;
சாவுண்டு மலிவாய்! நெஞ்சில்
சலிப்புண்டு வாழ்வில்" என்றார்.

செழும்படைத் தலைவ னான
சேந்தனும் அங்கு வந்தான்,
அழும்படி தொழிலா ளர்கள்
அறிவிப்பைக் கேட்டி ருந்தான்.
புழுங்கினான் நெஞ்சய, "போவீர்,
நாளை இப் பொழுது வாரீர்!
ஒழுங்குசெய் திடுவோம்!" என்றான்.
தொழிலாளர் ஒதுங்கிச் சென்றார்.

பிரிவு—11

(அரண்மனை மகளிர் இல்லத்தில் மல்லிகை அழுது கொண்டிருக்கிறாள். அவள் தோழி தாமரை வருகிறாள்)

மகளிர்இல் லத்தில் ஓர்பால்
மல்லிகை அழுதி ருந்தாள்,
புகன்றிடும் தரும இல்லம்
பூங்காவில் விநோதை, மன்னன்
மிகமிக மகிழ்ந்தி ருந்தார்!
வெண்ணிலா முகில்கி ழித்து
நகைக்காமல் லிதைந லிந்தாள்!
நலம்நுகர்ந் தாள்வி நோதை!

மென்காற்றுத் தணலா யிற்று
மெல்லியல் மல்லி கைக்கு!
மன்னவன் விநோதை இன்பம்
அயர்வதில் வியர்வை மாற்றிப்
பொன்னாக்கிப் புதிதாக் கிற்றுப்
பொழுதினைக் குளிர்பூங் காற்று!
மன்னிநா வறள்வாள்! மன்னவள்
மலரிதழ்த் தேன்கு டிப்பான்!

தாமரை வந்து பார்த்தாள்
தையலின் நிலைக்கு வேர்த்தாள்
"நாமினிச் செய்வ தென்ன?"
என்றனள் தோழி "நங்காய்!

மாமன்னர் மகிழ நாம்போய்
மன்னிப்புக் கேட்ப தொன்றே
நீமைபோம் படிநாம் இன்று
செயத்தக்க'' தென்றாள் மன்னி!

''முக்காட்டை எடுத்து வந்து
முகமலர் மறையப் போர்த்து!
நிற்காதே! நிலவும் வான
நீலத்தைப் போர்த்த தைப்பார்!
தக்கது நேரம், அந்தத்
தருமஇல் லத்துள் உள்ள
அக்கார அடிசி லைநான்
அடைவனேல் வாழ்வேன்!'' என்றாள்.

போர்வையைக் கொணர்ந்தாள் தோழி;
பொழிந்தது மழையை வானம்?
''கார்வைத்த குழலாய்! உன்றன்
கண்ணீரால் நனைந்த மேனி
நேரிட்ட மழைநீ ராலும்
நனையுமே! கிணற்று நீரை
ஊரிட்ட வெள்ளங் கொண்டு
போகா''தென் றுரைத்தாள் தோழி.

''கருப்பட்டிக் கட்டி அல்ல
என்மேனி; கரைந்திடாது
உருப்பட்டி ராதே என்று
நீஎன்னை உரைத்தாய் போலும்!
ஒருப்பட்டு வாஎன் னோடே''
எனக்கூறி ஒருத்தி யாகத்
தெருப்பட்ட தனித்தேர் போலச்
சென்றனள் தனியே மன்னி.

''பிழைபொறுத் திடுவாய்!'' என்று
பின்தொடர்ந் திட்டாள் தோழி!
மழையும்நின் றது,தொ டர்ந்து
மன்னியும் தோழி நானும்
நுழையாத தரும இல்லம்
நுழைந்தனர்; அறையின் சன்னல்
முழுமையும் திறந் திருக்க
உடல்ஒன்று முகம்இ ரண்டு

கண்டனள் மல்லி கைதான்!
காணாத காட்சி கண்டு
துண்டிரண் டானாள் மேனி.
துணுக்குற்றாள் நெஞ்சம். ''நான்தான்
கண்டது கனவா? என்றன்
கருத்துரு வப்ப திப்பா?
அண்டிற்றா என்றன் வாழ்வில்
அனற்காடு? செந்தேன்!'' என்றாள்.

மாமன்னர் மகிழ நாம்போய்
மன்னிப்புக் கேட்ப தொன்றே
நீமைபோம் படிநாம் இன்று
செயத்தக்க'' தென்றாள் மன்னி!

''முக்காட்டை எடுத்து வந்து
முகமலர் மறையப் போர்த்து!
நிற்காதே! நிலவும் வான
நீலத்தைப் போர்த்த தைப்பார்!
தக்கது நேரம், அந்தத்
தருமஇல் லத்துள் உள்ள
அக்கார அடிசி லைநான்
அடைவனேல் வாழ்வேன்!'' என்றாள்.

போர்வையைக் கொணர்ந்தாள் தோழி;
பொழிந்தது மழையை வானம்?
''கார்வைத்த குழலாய்! உன்றன்
கண்ணீரால் நனைந்த மேனி
நேரிட்ட மழைநீ ராலும்
நனையுமே! கிணற்று நீரை
ஊரிட்ட வெள்ளங் கொண்டு
போகா''தென் றுரைத்தாள் தோழி.

''கருப்பட்டிக் கட்டி அல்ல
என்மேனி; கரைந்திடாது
உருப்பட்டி ராதே என்று
நீஎன்னை உரைத்தாய் போலும்!
ஒருப்பட்டு வாஎன் னோடே''
எனக்கூறி ஒருத்தி யாகத்
தெருப்பட்ட தனித்தேர் போலச்
சென்றனள் தனியே மன்னி.

''பிழைபொறுத் திடுவாய்!'' என்று
பின்தொடர்ந் திட்டாள் தோழி!
மழையும்நின் றது,தொ டர்ந்து
மன்னியும் தோழி நானும்
நுழையாத தரும இல்லம்
நுழைந்தனர்; அறையின் சன்னல்
முழுமையும் திறந் திருக்க
உடல்ஒன்று முகம்இ ரண்டு

கண்டனள் மல்லி கைதான்!
காணாத காட்சி கண்டு
துண்டிரண் டானாள் மேனி.
துணுக்குற்றாள் நெஞ்சம். ''நான்தான்
கண்டது கனவா? என்றன்
கருத்துரு வப்ப திப்பா?
அண்டிற்றா என்றன் வாழ்வில்
அனற்காடு? செந்தேன்!'' என்றாள்.

அரசனா உன்று மீண்டும்
அரசிதான் நன்கு பார்த்தாள்.
தெரிசுடர் விளக்கின் முன்னே
செந்தா ரைமு கத்தை
ஒருமங்கை தானா என்றே
உற்றுப் பார்த்தாள்! தோழி
அருகினிலே நின்றாள் அன்றோ!
அவள்தோளில் முகம்க விழ்ந்தாள்.

''உண்டோடி வாழ்வெ னக்கே
உலகினில்!'' என்றாள் மன்னி.
வண்டோடி அரங்கு செய்யும்
மலரோடும் குழலாள் தோழி
தண்டொடிந் திட்ட செய்ய
தாமரைப் பூவைத் தோளில்
கொண்டேகி மகளிர் இல்லம்
கொண்டபஞ் சணையில் போட்டாள்!

''வரவேற்க வில்லை என்று
வருந்திய தாய்உ ரைத்த
உரைஏற்க வேண்டு மோ? பொய்
உரையன்றோ உரைத்த தெல்லாம்?
வரவேற்க முடியாக் காதல்
ஒருத்திமேல் வைத்த தற்குத்
திரையேற்றி மறைவி லேதம்
திருக்கூத்தை நடத்த லானார்.

''காதலால் இருவர் தம்முள்
கருத்தொரு மித்தார். பின்னர்
சாதலால் பிரிவ தன்றித்
தாம்பிரிந் திடுதல் உண்டோ?
ஈதொரு வியப்புத் தோழி!
எனைப்பிரிந் திட்ட மன்னர்
மாதொருத் தியையும் கொண்டார்!
குறிஞ்சிக்கோர் வடுவைச் சேர்ந்தார்.

''முன்னைக்கு முன்அ றங்கள்;
முளைத்ததும், ஆரி யர்க்கே.
தன்னைக்கொ டுத்த றங்கள்
தவிர்ந்ததும், தமிழாம் எங்கள்
அன்னைக்கி ருந்த சீர்த்தி
அழித்ததும், ஆன அந்தச்
சென்னைக்குச் சென்றார்: கையிற்
சென்னையைக் கொண்டு வந்தார்.

''சிவனொரு கடவுள் என்றும்
திருமாலோர் கடவுள் என்றும்
அவர்பெண் டிர் உறவி னோர்கள்
ஆகியோர் கடவுள் என்றும்

நவிலுமோர் சென்னை தன்னில்
நம்மன்னர் கூத்தி தேடத்
தவங்கிடந் திடவா வேண்டும்?
தரகர்க்கும் குறைவே தங்கே?

"நாவலூர் தனிற்பி றந்த
நடைகெட்ட சுந்த ரன்தான்
காவலார் திருவா ரூரிற்
கற்பிலா ரிடைப்பி றந்த
ஆவலூர் பாவை தன்னை
ஆலயம் எனும்ஓர் காமக்
காவலிற் கண்டு மையல்
கொண்டானாம் சிவன்கண் டானாம்!

"மணஞ்செய்து கொளச்செய் தானாம்.
மாப்பிள்ளை மற்றும் ஓர்நாள்
அணங்குசங் கிலியாள் தன்னை
ஒற்றியூர் ஆல யத்தில்
வணங்கையில் கண்டிட் டானாம்
மையலும் கொண்டிட் டானாம்!
தணியாத காமத் தீயன்
தம்பிரான் தோழன் ஆங்கே,

"சங்கிலி இடம்உ ரைப்பான்;]
'தையலாள் பரவை தன்னை
அங்கொரு நாள்ம ணந்தேன்
அதுமெய்தான்; எனினும் உன்பால்
தங்குவ தன்றி அந்தத்
தையலை இனிமேல் நண்ணேன்;
இங்கிதே உறுதி யாகும்
என்றானாம்? 'சரி' என் றாளாம்,

"சிறுமியைக் கெடுத்தான்: பின்னர்த்
திருவாரூப் பரவை யாள்பால்
உறுமையல் உறுதி சொன்னான்;
உரைத்தஓர் உறுதி எண்ணான்.
பிறைநுதற் பரவை யாளும்
பிணங்கிநீ வராதே என்றாள்.
மறைகண்ட சிவனும் அன்னாள்
மனமாற்றிச் சேர்ப்பித் தானாம்.

"ஒருத்தியை மணந்தோன் பின்னும்
ஒருத்தியை மணப்ப தென்னும்
திருத்தமோ அன்பு கொல்லும்
'தீ' அங்கே சிவமாய் வாழ்ந்தால்,
உருப்படா நாட்டில் எந்த
உருப்படி உரிமை யோடு

கருப்பெறும்? பெறும்பிள் ளைகள்
கடப்பரோ அடிமைச் சேற்றை?

பிரிவு—12

(தீமைகளும் தமிழ் இனப் பண்பாட்டுச் சீரழிவுகளும் தொகுத்துப் பார்க்கும் அரசி மல்லிகை, தன் அண்ணனுக்கு மடல் அனுப்புகிறாள்.)

"பலபெண்கள் ஓர்ஆண் கொள்ளும்
பழிச் செயல் தன்னை மன்னர்
சிலநாளிற் கற்ற தோடு
செயலிலும் காட்டி னாரே!
அலாதண செய்யும் சென்னை
என்னும்ஆ சிரியன் வன்மை,
உலகமே வியப்ப தன்றோ
ஒன்றியது; மற்றொன் றுங்கேள்;

"வையகம் வியக்கும் வண்ணம்
அகப்பொருள் வளர்ந்த நாட்டில்
ஐவரை மணந்தாள் ஓர்பெண்!
அவளைப்போல் படிவம் ஒன்று
செய்யவும் சொல்லிக் கோயில்
செய்தங்கே வைக்கச் சொல்லி,
உய்யவே வணங்கச் சொல்லி.
ஊரெலாம் முழக்கஞ் செய்தார்.

"நல்லொழுக் கம்கா ணாத
நாட்டினர் ஆரி யர்தம்
புல்லொழுக் கத்தை அங்கே
புகுத்தினார்; வேண் டாம் என்ற
சொல்லும்கே ளாமல் ஆண்டு
தோறும்அத் துரோப தைக்கு
நில்லாமல் மணவி ழாவும்
கூசாமல் நிகழ்த்துகின் றார்.

"பகர்உருக் குமணி மற்றும்
பாமையாள் இருபெண் டாட்டி
நுகர்பவன் நாள டைவில்
நுவலும்பல் லாயி ரம்பேர்
மகளிர்கற் பழித்தான் அஃனோன்
மக்களைக் காப்போன் என்று
புகல்கின் றார்; படிவம் வைத்துப்
பூசனை புரிகின் றார்கள்.

"அறுபதி னாயி ரம்பேர்
கற்பினை அழித்தா னாம்ஓர்
தறுதலை! அவனைத் தூக்கித்
தலையில்வைத் தாடு கின்றார்!

உறுதியில் லாது வாழும்
தமிழர்கள் ஒழுக்கத்திற்கோர்
இறுதியைச் செய்தார்; முன்னாள்
உலகுக்கே ஒழுக்கம் ஈந்தார்.

"எண்ணமும் செயலும் இவ்வா
றிருந்திடும் நாட்டில் வாழ்வின்
கண்ணெனும் பெண்ணி னந்தான்
கடைத்தேற வழியு முண்டோ?
மண்ணினும் கேடாய் அன்றோ
மதிக்கின்றார் பெண்ணி னத்தை!
எண்ணினும் மானக் கேடாம்
இன்னொன்று சொல்வேன் கேட்பாய்;

"உடையிலா இளைய மாதர்
ஓவியம் எழுதச் சொல்லிக்
கடையிலும் வீட்டி னுள்ளும்
கட்டியே தொங்க விட்டுப்
படையுடன் ஆடவர்கள்
பார்த்துள்ளம்க ளிப்ப துண்டாம்!
மடந்தைக்கு மனம்வேண் டாமாம்!
எடுத்தாள உயிரே போதும்.

"ஒருத்தியின் ஆடை தன்னை
ஒருதீயன் ஒதுக்கு கின்ற
திருந்தாஓ வியத்துக் கெல்லாம்
தேர்கோயில் ஆம்இ டங்கள்
பொருத்தம்எல் பாராம் மேலும்
புதுக்கலை இதுஎன் பாராம்.
சிரிப்பாகச் சிரிக்கும் அங்கே
சேயிழை யாரின் மானம்.

"நூலெலாம் பெண்ணைத் தாழ்த்தும்;
நுண்ணறி வாளர் என்போர்
காலெலாம் கைஎ லாம்பெண்
கண்ணிலே மண்ணைத் தூவும்!
பாலெலாம் பாலோ! பெண்பால்
பழிக்கடை யாளம் என்பார்;
தோலெலாம் குருதி யுண்டோ
இலையோஅத் தொழும்பர் கட்கே?

"இவ்வகை யாக நாட்டில்
இழிநிலை ஏற்ப டுத்தி,
அவ்வகை நிலையைத் தங்கள்
ஆசைக்குப் பயன்ப டுத்தும்
தெவ்வர்கள் செயலைச் சற்றே
செப்புவேன்! அதையும் கேட்பாய்;

செவ்விதழ் மாதர்க் கெல்லாம்
விளம்பரம் செய்வா ரங்கே.

''கோடம்பாக் கத்தில் ஓர்எண்
குறிப்பிட்ட மாடி வீட்டில்,
'வாடம்பர்' என்ப தாம்ஓர்
வாணிக நிலையம் உண்டு.
'பாடங்கள் நடக்கும் ஆங்கே
படத்தொழில் ஆத ரிக்கக்
கூடங்கள் நிறைய வந்து
கூடுங்கள் குயிலி னங்காள்!'

''எனஏட்டில் படிப்பார் பெண்கள்;
எழிலான பட்டு டுத்தி,
இனமானம் தனைய கற்றி
வாடகை வண்டி ஏறி,
தனைஒப்பித் தம்மே லாடை
ஒருபுறம் தளர்த்திச் சோற்றுக்
கனவுக்குத் துணிவு கூறிக்
கடாக்களின் இடம்செல் வார்கள்.

''முதலாளி முதலா ளிக்கு
முழந்தாளி படநு ணுக்க
மதியாளி, பணம்ப டைத்த
அறிவாளி அமர்ந்தி ருப்பார்;
புதுவாளி விழிமா தர்கள்
போயங்கே சிரித்து நிற்பார்;
முதலாளி தானே தன்னை
முன்னறி வித்துக் கொள்வான்.

''அமருங்கள் என்று சொல்வான்.
அங்குள்ள படக்க ணக்கன்:
'உமக்குள்ள உயரம் காண
ஒருபக்கம் நிற்பீர்' என்பான்;
தமக்குள்ள பெருமை சொல்வான்;
தமிழ்தெரி யாமை சொல்லிச்
சுமையாக ஆங்கி லத்தைச்
சுமந்ததை விரிவாய்ச் சொல்வான்.

''முதலாளி சொன்ன வண்ணம்
முழந்தாளி சுவைநீர் ஈவான்;
முதலாளி பாடச் சொல்வான்;
முன்னிற்போர் 'ஆம் ஆம்' என்பார்;
முதலாளி ஆடச் சொல்வான்;
முட்டாளோ, 'எழுக' என்பான்.
முதலாளி விருப்பம் சொல்வான்;
மாமாக்கள் முடித்து வைப்பர்!

'பொழுதுபோம்! தூங்கிப் போகப்
புகலுவார் மாமா மார்கள்!
கழுகுகள் கருத்த றிந்தும்
கன்னியர் ஒப்பு வார்கள்!
மழை நீராய்ப் பொழியும் புட்டில்;
புலாற்சோறு மலையாய்ச் சாயும்;
கழிந்திடும் உணவு! மேலே
கயவருக் கென்ன வேலை?

"மாணவர் பொறிஇ யக்க
வண்டியில் ஒருத்தி யோடு
சென்னையின் கடற் கரைக்குச்
சொல்லுவார்; அமைச்ச ரானோர்,
'பொன்னேஎன் கண்ணே! உன்னைப்
புதுப்படந் தன்னில் நாளை
தன்னிலை தருவேன்; இன்று
நடத்துநம் படத்தை' என்பார்.

"நடைக்கட்டில் மாடிக் கூட்டில்
இத்தீமைச் செயல்கள் யாவும்!
முடிக்கட்டும் என்று கீழ்ப்பால்
முளைத்திடும் இளங்க திர்தான்!
படத்தினில் இடங்கேட் டார்க்குப்
படக்கணக் கன்பு கல்வான்;
'உடற்கட்டே எதுவு மில்லை;
உதவாய்நீ படத்திற் கென்றே!'

"மடத்தினுக் குடலை விற்கும்
மாதர்கள் கூட்டம் ஒன்று!
கொடுத்தவன் வாழ்வைத் தீர்க்கக்
கோயிலுக் குடலை விற்கும்
நடக்கையார் கூட்டம் ஒன்று!
கலைக்குத்தான் நல்வாழ் வென்று
படத்தொழிற் குடலை விற்கும்
பாவையர் கூட்டம் ஒன்று!

"காணுமிக் கூட்டம் மூன்றும்
களையெனக் கிளைக்கு மாங்கே!
நாணமில் லாத பல்லோர்,
நாளுமிக் களைகள் ஓங்க,
ஊனுறக் கங்க ளின்றி
உழைப்பது வியப்பே யாகும்;
பூணூலார் இவ்வா றான
படங்களைப் புகழ்ந்து வாழ்வார்!

"கள்ளவா ணிகர்கள் மக்கள்
உழைப்பினைக் கவர்ந்து நாளும்

கொள்ளைகொள் செல்வர் எல்லாம்
கொடியதோர் படத்தொ ழிற்கே
வெள்ளையாய்த் தொண்டு செய்வார்;
வெறுப்பினை நீக்க என்ன
உள்ளதென் றாய்வு செய்யார்;
திருந்தவும் உள்ளம் கொள்ளார்!

''வடக்குவிந் தியமும் தெற்கில்
வளர்குும ரியுமாய் இன்று
முடக்கப்பட் டிருப்ப தான
முதியதோர் நிலத்தி னுக்கே
இடப்பட்ட பெயர்த மிழ்நா
டெழில்திரா விடநா டாகும்;
நடப்பதோ ஆரி யத்தின்
நாகரி கந்தான் அங்கே!

''தமிழ்நாட்டில் தமிழுக் கன்றோ
தலைமைதந் திடுதல் வேண்டும்?
தமிழ்நாட்டில் தமிழ னன்றோ
தலைமைதாங் கிடுதல் வேண்டும்
தமிழ்நாட்டில் பிறமொ ழிக்கே
தலைமைதந் துயிர்வாழ் கின்றார்!
தமிழ்நாட்டில் தலைமை யாவும்
தமிழரின் பகைவர் கையில்!

''தமிழ்நாட்டில் வடமொ ழிக்கே
விளம்பரம் தருகின் றார்கள்.
தமிழநாட்டில் தமிழைத் தாழ்த்தும்
தாழ்ந்தவர் உயர்ந்தோ ரங்கே;
தமிழ்நாட்டில் தமிழ்ப்பண் பாடு
தலைகாட்ட வழியே இல்லை.
தமிழரின் இலக்கி யங்கள்
தலைகீழாய்க் காணு மங்கே!

''வடசொல்லைத் தமிழ்ச்சொல் என்று
வழுத்திடும் நரிகட் கெல்லாம்
வடசொல்லும் தெரிவ தில்லை;
வாழ்வதும் அதனா லல்ல!
வடசொல்லைத் தாய்ச்சொல் லென்பார்
தமிழால்தான் வாழு கின்றார்.
வடசொல்லால் வாழா நாய்கள்
தமிழ்ச்சொல்லைக் குரைப்ப துண்டோ?

''வடநாட்டில் தமிழைத் தாங்கி
வாழ்ந்தவ னில்லை. ஆனால்,
வடசொல்லைத் தமிழர் நாட்டில்
வரவேற்க, ஆத ரிக்க,

மடத்தம்பி ரான்கள் உண்டு;
வயிற்றுச்சோற் றுக்கே நாளும்
துடைநடுங் கிகளே ஆன
தூயதமிழப் புலவ ருண்டு.

"தமிழ்வள்ளல் என்று தன்னால்
தனிப்பட்டம் பெற்ற பார்ப்பான்
அமைவாக இட்ட சோற்றில்
சுவைகண்டான் அன்ன வன்தான்
தமிழச்சுவை மணியாம் அங்கே!
தமிழரின் பகைக்கூட் டத்தை
உமிழாமல் அதற்கு ழைக்கும்
ஒருவன்தான் தமிழ ராட்சி

"அமைப்பவ னாம்அந் நாட்டில்!
அறிஞர்கள் பார்ப்பா ரெல்லாம்
நமர்அல்லர் என்னா நாமக்
கல்லான்ஓர் கவிஞன் அங்கே!
சுமக்கொணா வறுமை நல்கும்
வைதிகம் தோய்ந்த வாழ்வே
தமக்கென்னும் தேசி கங்கள்
தமிழ்க்கவி மணிகள் அங்கே"!

"மதிப்புள்ள தமிழ்ப் பிள்ளை
ஆயினும், தமிழா என்றால்
கொதிப்புள்ள பார்ப்பா ரென்ற
கூட்டத்தார் தம்கைப் பிள்ளை;
குதிப்புள்ள வடமொ ழிக்குக்
குளிர்தமிழ்ப் பிள்ளை என்னும்
புதுப்பிள்ளை யான் வையா
புரிப்பிள்ளை வாழ்வா ரங்கே!

"சென்னையின் தீமை எல்லாம்
நமக்கென்ன தெரியும்? நந்தம்
மன்னரே எடுத்து ரைப்பார்
அவண்சென்று வரும்போ தெல்லாம்!
முன்னெலாம் அவர்க் கெவைகள்
தீமையோ பின்ன வைகள்
நன்மையாய்ப் போன துண்டோ?
நங்கையே வியப்பே அன்றோ!

"அணுவொவ் வொன்றுந்தீ மைகள்
அணுகும்அச் சென்னை தன்னை
அணுகியங் கிருந்தா ராம்நம்
அணுக்கரை அத்தீ மைகள்
அணுகாவோ? நம்மை அன்னார்
அணுகாத வகைசெய் தாளை
அணுவேனும் பழியோம்! சென்னை
அணுகினார் பிழையே எல்லாம்"

எனக்கூறி மல்லி கைதான்
இருந்தபஞ் சணையில் துன்ப
மனத்தொடும் புரள லானாள்.
மனம்பொறாத் தோழி ஓர்பால்
சினத்தொடும் ஓடி அஞ்சல்
தீட்டியே அதனை ஏந்தித்
தனக்கொரு பணியாள் வேண்டித்
தெருநோக்கித் தனித்து நின்றாள்!

வந்துகொண் டிருந்தான் சில்லி.
"வருகநீ அண்ணா வாழ்க!
நைந்தாருக் குதவ வேண்டும்;
பொதுவறம் இதுவாம்! நாமோ
இந்தநல் அரண்ம னைக்கே
உழைப்பதை இனிதாய்க் கொண்டோம்;
குந்தாதே விளாமா வட்டம்
கொண்டுபோ அஞ்சல்" என்றாள்.

நடுங்கினான் சில்லி; அந்த
நடுக்கத்தை மறைத்தா னாகி,
"நடந்தவை என்ன தோழி
நவிலுக" என்று கேட்டான்.
"மடந்தையாள் ஒருத்தி யோடு
மன்னர் பஞ்ச ணைமேல்
கிடந்ததை மன்னி கண்டாள்,
துடிக்கின்றாள் புழுபோல்" என்றாள்.

"தன்னண்ணன் இடத்தி லேதான்
சாற்றுதல் வேண்டும்; நாட்டில்
பின்எவர் இந்தத் தீமை
நீக்குவார்" என்று பெண்ணாள்
தன்னிடம் மிருந்த அஞ்சல்
சடுதியில் வாங்கிச் சென்றான்.
முன்நிற்கும் குறைபா டெல்லாம்
முடிந்ததாய் நினைத்தாள் தோழி.

பிரிவு—13

(அஞ்சலைச் சில்லி நேரே சென்று விநோதையிடமே கொடுத்து விடுகிறாள்.)

அஞ்சலை விநோதை தன்பால்
அளித்தனன்! "மல்லி கைதான்
பஞ்சணை தன்னில் நீயும்
மன்னனும் படுத்தி ருந்த
நெஞ்சொவ்வாச் செயலைத் தானே
நேரினிற் கண்டாள்" என்ற

நஞ்சொத்த செய்தி தன்னை
நறுக்காகச் சொன்னான் சில்லி ;

பிரித்தனள் அஞ்சல் தன்னைப்
பெருவியப் படைந்தா ளாகி
சிரித்தனள் ''தன் அண் ணன்தான்
திறன்மிக்கான் எனினும், மன்னன்
இருக்கின்றான் ; இருக்கின் றேன்நான் ;
என்செய்வான் என்னை ?'' — என்றாள்.
''ஒருத்திநீ இல்லை. மன்னன்
ஒருவனும் அல்லன், கேட்பாய் :

''உலகமே எதிர்த் திட்டாலும்
ஒருவனாய் நின்றெ திர்க்கும்
வலியுளான் திண்ணன் என்பான் !
வந்தாய்நீ அறிய மாட்டாய்.
கலகமேன் ? ஏன்சாக் காடு ?
விரகொன்று காண்பாய்'' என்றான்.
தலையினை அசைத்தாள் : ''கேட்பாய்
சாற்றுவேன்'' என்று சொல்வாள் :

''தோள்வலி எல்லாம் சின்னத்
துப்பாக்கி முன்நில் லாதே !
ஆள்வலி அமைத்த கோட்டை
அணுகுண்டுக் குப்ப றக்கும் !
நீள்வலி யுடைய மன்னன்
நீராவி ஆற்ற லுக்கு
மூள்வலித் திண்ணன் என்பான்
முதுகுதான் எந்த மூலை ?''

இப்பேச்சைக் கேட்ட சில்லி
விநோதைபால் இயம்பு கின்றான் :
''துப்பாக்கி மிகவும் உண்டு ;
சுடுபவர் அரசர் தாமோ ?
பெய்ப்பான அணுகுண் டுண்டு ;
வீசுவோர் அரசர் தாமோ ?
அப்பா லும் உண்டு ; மன்னர்
அவற்றைக்கை யாள்வ துண்டோ ?

''ஒருவனைச் சிறைப் படுத்த
அல்லது சாக டிக்க
இருநூறு துப்பாக் கிக்கும்
இருநூறு பேர்கள் வேண்டும்
பெருங்கோட்டை ஒன்றைத் தாக்கப்
பெருமக்கள் வேண்டும் ; மன்னர்
இருக்கின்றார். இருக்கின் றார்என்
றியம்புதல் சரியா அம்மா ?

"தூக்குங்கள் என்றால் ஆட்கள்
துப்பாக்கி தூக்கி டாரோ ?
தாக்குங்கள் என்று மன்னர்
சாற்றினால் தாக்கி டாரோ ?
ஆக்குங்கள் தூளாய் என்றால்
அணுகுண்டை எறிந்தி டாரோ ?
போக்குங்கள் உயிரை என்றால்
போக்காரோ ? என்று சொன்னாள்.

"தாக்குதல் தாக்கல் போக்கல்
தூளாக்கல் எனும்ஆற் றல்கள்
ஆர்க்குண்டு ? மக்க ளுக்கே
அவைபொது வான துண்டு !
தேக்குண்ட திலைமன் னன்பால்
தேளிடம் நஞ்சு போல !
வாய்க்குண் டிங் கதிகா ரந்தான்
என்பாய்நீ மறுக்கின் றேன்நான்.

"அரசனின் அதிகா ரந்தான்
அரை நாளில் மாறக் கூடும் ;
அரசனாய் இருப்போன் நாளை
ஆண்டியாய் அலையக் கூடும் ;
அரசனின் அதிகா ரத்தை
அறத்தொடும் ஒத்துப் பார்த்துச்
"சரி இரு ; கீழி றங்கு
சடுதியில், என்பார் மக்கள்.

"அயலானைத் தொலைப்ப தற்கே
ஆற்றல்சேர் ஆளைத் தங்கள்
செயலாற்றும் நிலையில் சேர்த்தான்
திகழ்அம ரிக்கா ஆண்டான் ;
முயன்றஅவ் வாறே தாங்கள்
முற்றுந்தம் ஆளைக் கேட்க
இயலுமோ ? மக்க ளால்தாம்
இயலுமென் பதைஉ ணர்ந்தான்.

"ஆயுதம் செய்தோ ரெல்லாம்
அந்நாட்டின் தொழிலா ளர்கள் !
ஆயுதம் இயக்கு வோர்கள்
அந்நாட்டின் தொழிலா ளர்கள் !
மாயவே அயலார் நாட்டை
மண்ணாக்கு வீர்கள் என்பான்
தீயவன் ! செயற்ப டுத்தத்
தெரிந்தாரும் தீய ரல்லர்.

"மக்களை மக்க ளாலே
மாய்த்திட எண்ணு வோனை
மக்களும் விட்டு வையார் ;
மனச்சான்றும் விடுவ தில்லை.

மக்களை மரங்க ளாக
மதித்தநாள் மலைஏ றிற்று ;
மக்கட்குத் தொண்டு செய்தே
தனிமகன் வாழ வேண்டும்.

"திண்ணனோ அறத்தில் மேலோன் ;
சிற்றமும் அறமே செய்யும் !
மன்னவன் அவனை நேரே
மாய்ப்பது முடியா தென்றேன் ;
மன்னவன் ஆணை யாலோ
மற்றவர் மாய்ப்ப ரென்று
சென்னையார் எண்ணு வார்கள் ;
எண்ணாது செங்கு றிஞ்சி !"

என்றனன் சில்லி மூக்கன்.
விநோதைதான் இயம்பு கின்றாள்;
'உன்னைக்கொண் டவனை மாய்க்க
ஒண்ணாதோ எனக்கு? நீதான்
என்னைக்கொண் டெல்லாம் செயய
எண்ணுகின் றாயே ' என்றாள்.
"அன்னை நீ மகளும் நீயே
உன் ஆணைக் கடியேன்" என்றான்.

## அஞ்சல்

"மன்னிய விளாமா வட்ட
மன்னர் திண்ணர் தாளை
என் தலை சூடி அஞ்சல்
எழுதினேன்; தாம ரைநான்
மன்னியின் துன்ப வாழ்வை
வந்துநீர் மாற்ற வேண்டும்;
இன்னமும் சில்லி சொல்வார்;
சுருக்கமே எழுதி னேன்நான்?

"என்னுமிவ் வஞ்சல் தன்னைத்
தோழியே எழுதி னாளா?
மன்னிதான் எழுதச் சொல்ல
மற்றவள் எழுதி னாளா?
ஒன்றுமே புரிய வில்லை;
உனக்கொன்று சொல்வேன், நீ போய்
அன்னசின் னண்ணன் ஊரில்
இல்லைஎன் றறை அவள்பாள்"

என்றனள் விநோதை சில்லி,
"இவ்வாறு நான்உ ரைத்தால்,
இன்றந்தத் தோழி ஏகித்
தொலைப்பேச்சுப் பொறியைக் கொண்டே

அன்னவன் ஊரில் உள்ள
சேதியை அறிந்து கொண்டால்,
என் வாழ்வு மண்ணே அன்றோ?
இதற்கென்ன செய்வேன்? என்றான்.

''ஆவண செய்வேன்; நீயும்
அதுவரை இங்கி ருப்பாய்;
நாவினால் இதையார் பாலும்
நவிலாதே'' என்று கூறிப்
பாவைஅவ் விநோதை சென்றாள்
பஞ்சணை அறையை நோக்கி!
காவலன் நீரா டிப்பின்
கண்ணே என்றங்கு வந்தான்!

பிரிவு—14

(திண்ணனுக்குக் குறிஞ்சித் திட்டின் நிலை தெரியாமற் செய்ய ஏற்பாடு செய்ய விநோதை வேண்டுகின்றாள்.)

சிற்றுண்டி அருந்த வாடி
செந்தேனே'' என்றழைத்தான்.
''சிற்றுண்டி பிறகா கட்டும்;
திண்ணனால் நீயும் நானும்
எற்றுண்டு மாயு முன்னர்
ஏற்றது செய்ய வேண்டும்.
ஒற்றரை அரண்ம னைக்குள்
உலவிடச் செய்ய வேண்டும்.

''அரசியோ தோழி யோமற்
றங்குளார் எவரோ யாரும்
தெருச்செல்ல முடியா வண்ணம்
செய்திட வேண்டும்; மேலும்
ஒருத்தரும் விளா மா வட்டம்
ஓடாமற் பார்க்க வேண்டும்;
உரைத்தவா றிவற்றைச் செய்ய
ஒண்ணுமோ உம்மால்? என்றாள்.

''சின்னமைத் துனனுக் கிந்தச்
செய்தியே எட்டா வண்ணம்
என்னென்ன செய்யவேண்டும்
அதையெல்லாம் இன்றே செய்வேன்!
கன்னலின் கட்டி யேநீ
கடிதினில் உண்ண வாடி!''
என்னலும், மன்ன னோடு
விநோதையும் எழுந்து சென்றாள்.

பிரிவு—15

(விநோதை மன்னனிடம் சில்லி அமைச்சன் வருவது கூறு கிறாள்.)

"யாழும் விரலும் எழிற்றமிழும் நின் நாவும்
வாழும் படிசெய்யும் மாமருந்து! நானவற்றை
உண்ணாத நேரம் உயிர்நீத்த நேரமடி!
கண்ணே உடன்என்னைக் காப்பாற்றவேண்டு"மென்று
மன்னவன் தன்கையால் மங்கைமுக வாயேந்த—
மின்னொடு மெல்லிடையாள் மேலாடை தான்விரித்துக்
கண்ணீர் ஒளிசிந்த காதல் நகைசிந்த,
மண்ணில் முகிற்கூந்தல் வண்டோடு பூச்சிந்த,
ஆடி நடக்குங்கால் அழகுசிந்த, நல்யாழை
மூடிட்ட பட்டோடு தங்கியே முன்னிட்டுத்
தேர நரம்பு தெரித்து முறுக்காணி
சேரத் திருகியே சீர்செய்து, பட்டோடு
பண்ணிட்டுப் பாவொடு தேனிட் டிருக்கையிலே.
புண்ணிட்டான் நெஞ்சிற் புகுந்தானங் கேசில்லி!

"அம்மா அமைச்சர் வருகின்றார் நின்பாட்டைச்
சும்மா நிறுத்திச் சுருக்காய் மறைந்து கொள்வாய்;
ஏனென்றால் நீ அயலாள்; இந்நாட்டுக் காரியல்லள்;
ஊனம் வருமன்றோ, உண்மை தெரிந்துவிட்டால்?
அந்த அமைச்சர் அடாச்செயல்கள் செய்பவர்,
இந்தமன்ன ரேஎனினும் இம்மியும் தாங்கார்!"
எனச்சொல் வளர்த்திட்டான்; ஏந்தலுக்கு வந்த
சினத்தீ மிகுதி எனினும், செயலொன்றும்
செய்யஇது நேரமல்ல என் றெண்ணிச் "சில்லிநீ
பைய அமைச்சரைப் பார்க்க அழை" என்றுரைத்தான்.
சில்லி மெதுவாகச் சென்றான்; அறைக்குள்ளே
மெல்லியும் சென்றாள் விரைந்து.

வேறு: அகவல்

"அரசியைப் பிரிந்துநீ அயல்நாடு சென்றாய்;
அரசி உயிரின் அரைப்பங்கு தீர்ந்தது;
வந்தாய்; அரண்மனை வராததால் காற்பங்கு
வெந்தது! வேந்தே வேறொரு பெண்ணுடன்
உன்னைக் கண்டால் மீதியும் ஒழியும்!
மன்னியின் முழுதுயிர் வளர்க்க வருவாய்.
பாவை தனக்கிவ் வுலகில் தேவை
சோறன்று; மிளகின் சாறன்று; தமிழ்ஒன்றே!

அத்தமிழ்,"மாதர்க் கருளுவ தென்னெனில்
தற்காத் துத்தற் கொண்டான் பேணித்
தகைசான்ற சொற்காத் துச்சோர் விலாள்பெண்
என்ப தாகும், இதனை அறியீரோ?
இல்லாள் கடமை இவைகளாம்; அவற்றை அந்
நல்லாள் நடத்தவும் தவறாள் அன்றோ?
தன்னைக் காத்துக் கொண்ட தையல்
உன்னைக் காக்கும் உறுதி பூண்டாள்;
அன்றியும் தன்குடிக் கமைந்த பெருமைக்கும்
ஒன்றும் கேடு வராவகை உணர்ந்தவள்
இவைகளில் சோர்வு கொள்ளுவா ளில்லை.

தவறென் றதனைச் சாற்ற லாமோ!
அறவழி மறந்தாய்; பிறவழி அடைந்தாய்!
இருதா ரம்கொளல் நம்குடிக் கேற்றதோ?
அயலாள் ஒருத்தி உன்னை அணுகி
மயலால் உன்றன் மனம்கெடுக் கின்றாள்.
அன்னவள் தொடர்பை அகற்றி அதன்பின்
அரசி யிடத்தில் அதனைச் சொல்ல
விரைவில் எழுந்துவா; விழுந்தவள் எழுவாள்;
அயலான் தன்னை அழிக்க அரசி
தூக்கிய வாளை தொப்பென்று போட்டாள்
ஏனெனில் நீ அவ் வேந்திழை மேலே
உயிர்வைத் திருப்பதை உணர்ந்தால் ஆதலால்!

உண்ண மறுத்தாள்; உறங்க மறுத்தாள்;
உயிரை வெறுத்த கார ணத்தால்
தன்னுயிர் விடுவதே உன்னைக் காப்பதாம்
அவளுயிர் பிரிந்தால் அரசநீதிருந்துதல்
முடியும்; அல்லது நின்னுயிர் முடியும்!
ஏனெனில் நீசெய்த மானமி லாச்செயல்
மக்கள் அறியும் வழியொன் றேற்படும்.
சிக்கென உன்னைத் திருத்த முயல்வார்;
இன்றேல் உன்னை அன்றே அழிப்பார்''
என்று கூறினான். அமைச்சன் இயம்பிய
தரசன் நெஞ்சில் அச்சுறுத் தியதே!

''உண்ணவும் உறங்கவும் மறுத்தன ளாஎன்
எண்ணத் தினிலே இருந்திடும் அரசி ?''
என்றான். ''ஆம்'' என் றிசைத்தான் அமைச்சன்.
விரைவில் எழுந்தான் ; மிகவும் இரக்கம்
காட்டிக் கொண்டான் ; கடிது சென்றான்,
அமைச்சன் முன்னே செல்ல,
இமைப்பினில் அரண்மனை தன்னை நோக்கியே.

## பிரிவு — 16

(ஆலைத் தொழிலாளர் அரண்மனையைச் சூழ்ந்து கொள்கிறார்கள். அக்கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு அரசி மல்லிகையிடம் செல்கிறாள்.)

ஆலைத் தொழிலாளர் அன்னார்க் குடன்வருந்தி
வேலைநிறுத் தம்செய்த வேறு தொழிலாளர்
ஆனபெருங் கூட்டம் அரண்மனையைச் சூழ்ந்திருக்க
வான உடுக்களிடை வட்டநிலாப் போல்சேந்தன்.
''மன்னர் வருவார்; வழிசெய்வார்; நீங்களெலாம்
இன்னலின்றிக் காத்திருங்கள்'' என்று தெளிவுரைத்து
நின்றிருந்தான்! நேர்வந்த மன்னனும் தன்மக்கள்
கூட்டத்தைத் தாண்டி அரண்மனைக் கூடத்தின்
நீட்டம் கடந்து நிலாமுற்ற முங்கடந்து
தக்க மகளிரில்லம் சார்ந்த அறையொன்றில்
மிக்க துயரும் மெலிந்த உடலும்நிறை
கண்ணீரும் கம்பலையும் ஆகஒரு பஞ்சணையில்
பெண்ணிற் பெருந்தகையாள் பேரரசி தான்கிடக்கச்
சென்று நின்றான் வேந்தன் ''திரும்பி எனைப்பாராய்
மன்றின் விளக்கே மல்லிகையே? என்று தன்
அங்கையினால் அன்பின் அரசி முகம்திருப்பத்
திங்கள் முகத்தாள் செழுந்தீயைக் கக்கலுற்றாள்;

பெண்ணினத்தின் குன்றாப் பெருமைதனை நீதோன்றி
மண்ணாக்கி விட்டாய்; மரம்கணவன் வேர்மனைவி!
வேரை மரம்வெறுத்தால் வீழ்ந்திடுமன் றோகுடும்பம்!
பண்டுமுதல் இந்தநாள் மட்டும் பழங்குறிஞ்சி
கண்டதுண்டா ஆடவ னிரண்டுபெண்டு கொண்டதனை?
என்ன நினைத்தாய்? அறநெறியை ஏன்மறந்தாய்?
மன்னவன்ஏ தும்செயலாம் என்றால் குறிஞ்சிக்கும்
சென்னைஎன்று சொல்லுமந்தத் தீயவரின் நாட்டுக்கும்
என்னதான் வேற்றுமை என்கின்றாய்? எண்ணிப்பார்.

மன்னிநான் இங்கிருக்க மற்றொருத்தி யோடுநீ
பின்னிய தோளில் பிழைசுமந்தாய். அங்கவளைக்
கட்டிய தோளில் கறை சுமந்தாய் காமத்தால்.
எட்டிய தோளினிலே ஏச்சுச் சுமந்தாய்
அயலாளை நாட்டை அழிப்பாளைத் தீய
மயலால் அணைத்தஉன் மார்பிற் பழிசுமந்தாய்.
இவ்வுலகம் தோன்றியநாள் தொட்டிந்த நாள்மட்டும்
ஒவ்வாச் செயல்செய்யா உன்றன் பழங்குடியின்
கீர்த்திக்கும் செந்தமிழ் அன்னைக்கும் நாட்டுக்கும்
வாய்த்தாய் பெருவாழ்வை வாட்டும் மதம்போலே
தோய்த்தாய் சுவைப்பாலில் நச்சுக் கொடியைத்
துறைதோறும் உள்ள தொழிலாளர் எல்லாம்
இறைவன் எங்கேஎங்கே என்றேங்கும் போது

திருவரங்கச் சேரியிலே சென்னைத் தமிழன்
இரவைக் கழிப்பதுபோல ஏனோ மறைந்துறைந்தாய்?

கட்டத் துணியளித்தார். கல்லுழுது நெல்லளித்தார்.
வெட்டிக்கா டெல்லாமே வீடாக்கித் தந்தார்!
எருக்கு முளைக்கும் இடர்ப்பாம்பின் பல்போல்
பருக்கைக்கல் வாய்த்தும் படுபள்ளம் வாய்த்தும்முள்
முட்டுநிலம் நேராக்கி முல்லை பரப்பியதோர்
பட்டு மெத்தை போன்றநிழற் பாதை யளித்தார்.
தரைமீது பட்டணங்கள் தந்தார்; கடலின்
திரைமீது பட்டணங்கள் செல்லும்படி அமைத்தார்
வானத் தெருக்களிலே மாமுகிலின் சோலையிலே
போனேன் இதோ என்னும் புள்ளூர்தி செய்தளித்தார்

அப்போதைக் கப்போதில் ஆசையுற்ற எப்பொருளும்
தப்பாது செய்தளித்தார் தங்கள்செல் வாக்கைஎல்லாம்
இந்நாட்டை நீயாள ஈந்தார் தலைமீது
பொன்முடியைச் சேர்த்துப் புகழ்ந்தார்; அவர்களைநீ
மாந்தர் எனவும் மதிக்கவில்லை; உன்னையவர்
வேந்தர் எனவும் மதிப்பாரோ? வேல்எடுத்துக்
கொந்தும் வறுமை கொளுத்தும் பசிக்கொடுமை
இந்தநே ரத்திலுமா கூத்தி யிடம்இன்பம்!
நாய்திருந்தும் குள்ள நரிதிருந்தும் காஞ்சிரங்

காய்திருந்தும் எட்டிக் கனிதிருந்தும் சென்னையினை
ஆளுவதாய்ச் சொல்லி இனந்தாங்கும் அன்பிலாத்
தேளும் திருந்துமினி நீதிருந்தப் போவதில்லை!
தீங்கு செய்தாய் செய்கின்றாய் செய்வாய்! இதோ நொடியில்
ஈங்குன்னைக் கொல்ல முடியும்என்னால் என்றாலும்
கோதை நலத்துக்குக் கொன்றாள் என் றிவ்வுலகம்
ஓதும் அதனால் உலகம்அழிக் கட்டுமுனை''
என்றாள் இடையில் இருந்த பெருங்கத்தி
ஒன்றால் உயிர்பிரிந்தாள் நற்பண்பின் ஓவியத்தாள்.
நெஞ்சம் திடுக்கிட்டான் நேரிலுள்ள எல்லாமும்
அஞ்சப் புரிந்தன! ஆஎன்றான் ஓ என்றான்!
தன்பிழைகள் எல்லாம் தனித்தனியே ஆளாகி
உன்னைவிட மாட்டோம் ஒழிந்துபோ என்பதுபோல்
தன்நேரில் தோற்றும், தனிமன்னன் தாள்நெருங்கி

என்னசெயல் செய்தேன் நான்! என்னசெயல் செய்தேன்நான்!
மன்னவர்க் குள்ளபெரு மாண்பு குறைந்தேனே!
பண்டைப் பெருமைஎலாம் பாழாகச் செய்தேனே!
அண்டை அயலார்கள் தூற்றுவரே! அன்புடைய
என்மனைவி இந்தநிலை எய்தப் புரிந்தநான்
இன்னும் உயிரோ டிருத்தல் சரியாமோ?''
என்றான் எடுத்தான் உடைவாள் உயர்த்துகையிலே,
நின்றான் அங்கோடி வந்து நீள்வாளைத் தான்பிடித்தே
''எண்ணித் துணிந்திடுக!'' என்றாள், விநோதையவள்

கண்களின் முன்னேயும் கண்டு பழகிய ஓர்
பொன்னிலே புத்தொளியை அப்போதும் கண்டேஅப்
புன்னகையில் நெஞ்சத்தைப் போக்கி உடைவாளை
அன்னவளே கொள்ள அவள்தோளில் தோளிட்டே,
"மன்னி பொறாமை மடித்த தவளை" என்று.
சொல்லி இனித்தொல்லை ஒழிந்ததென்று துள்ளியே
மெல்லி விநோதையுடன் சென்றான் விடுவிடென்று!

'நல்லாரால் அன்றோ நடக்கின்ற திவ்வுலகம்!
எல்லாரும் ஏத்தும் அரசி இறந்தாளே'!
என்றங் கிருந்தவர்கள் எல்லாரும் கைகட்டி
ஒன்றும்பே சாமலே கண்ணீர் உகுத்திருந்தார்;
ஏங்கின நெஞ்சம்; எாமலைபோல் மூச்சுக்கள்
வாங்கின; மார்பு வணங்கின அத்தலைகள்!
நாளை நடப்பதென்ன என்றந்த மெய்த்துன்ப
வேளை மிகவும் நடுங்கிற்று

## பிரிவு—17

(மன்னனும் விநோதையும் போகின்றார்கள். மன்னியின் உயிர் போனதைக் காணுகின்றாள்—தோழி தாமரை; அவள் கூந்தல் அவிழ்கின்றது. கண்ணீர் பெருகுகின்றது. அவள் வெளியிட ஓடுகின்றாள்—இதை விரித்துரைக்கின்றது இப் பிரிவு.)

### எண்சீர் விருத்தம்

"போகின்றாள் பழிகாரி! போகின் றாளே
பொன்னான என்னரசி பதைப தைத்துச்
சாகின்றாள் என்பதையும் எண்ணி டாமல்,
தாய்நாடு துடிப்பதையும் எண்ணி டாமல்,
வேகின்றார் இனமக்கள் எனஎண் ணாமல்,
வேந்தனார் உள்ளத்தைப் பிரித்தெ டுத்துச்
சாகின்றார் சாகட்டும் எனஅ தோபார்
போகின்றாள் பழிகாரி! அவள்கை கோத்துப்
போகின்றார் வேந்தனார் நன்றோ? நன்றோ?

"நாட்டாரின் உள்ளமெலாம் சீற்றம் வைத்து
நடக்கின்றாள்! அவள்கொண்ட இறுமாப் புக்கு
நீட்டாண்மைக் காரராம் இந்த வேந்தர்
நெடுந்துணையும் ஆனாரே! அறம்போ யிற்றே!
போட்டாளே இந்நாட்டின் இன்பவாழ் விற்குப்
புதுநச்சுக் குண்டுதனை! வேந்தர் தாமும்
ஆட்பட்டார்! அரசிக்கு வைத்த அன்பை
அப்படியே கூத்திற்கே ஆக்கி னாரே!

''நெறியதனை இடைமறித்தாள்! அழித்தாள் நாட்டை!
நேரரசின் உளம்ஒடித்துத் தின்றாள் என்று
பொறையுளத்து மன்னியார் பொறுமை நீத்தார்;
பொன்னான தன்வாழ்வை நீத்தார் அந்தோ
திறலில்லேன் அரசனார் கையி னின்று
தீயாளைப் புறம்போட்டுக் கொன்றே னில்லை!
இறக்கவில்லை இருக்கின்றேன்! இழிவு கொண்டாள்
இறப்புக்கு வழிதேடிச் சாவே னாக!''

### அகவல்

கையோடு கையும் காதற் பாட்டுமாய்
ஐயனும் அவளும் ஆடிச் சென்றனர்.
கால்தள் ளாடக் கைகள் ஓயச்
சீறு கின்ற சிற்றிதழ் துடிக்கத்
தாமரை அங்குத் தமரை யெல்லாம்
அழைத்தா ளாகி, அழுதா ளாகி,
அங்குளார் அஞ்சி நடுங்குதல் அறிந்து,
வாழைநார் போலத் தரையில்
வீழுவாள் விம்முவாள் உயிர்பிரி கிலளே.

## பிரிவு—18

(விளா மாவட்டத்திலுள்ள திண்ணனுக்கும், இளந்திரையனுக்கும் மல்லிகை இறந்த செய்தி எட்டுகிறது. அவர்கள் வருகின்றார்கள். வருகையில் இரண்டு பெண்களின் அழுகுரல் கேட்கிறது. அவர்களைத் துன்பத்தினின்று மீட்க முயன்றதில், திண்ணனும் இளந்திரையனும் கொல்லப்படுகின்றனர்,)

### அறுசீர் விருத்தம்

சென்றது விளாமா வட்டத்
திண்ணனா ருக்கும் மன்னி
சென்றஅச் சேதி மற்றும்
சிலவிடங் கட்கும் ஆங்ஙன்!
குன்றினை முகில்ம றைத்துக்
காண்டாற்போல குறிஞ்சி நாட்டை
வன்துயர் மறைந்த தங்கே!
மகிழ்ந்தது தரும இல்லம்!

''அரியஎன் தங்கையே! என்
றழுகுரல் ஒன்றும், ''என்னைப்
பிரிந்தாயே அம்மா'' என்ற
பெருங்குரல் ஒன்றும் தாங்கி,
விரைந்தது நகரை நோக்கி
வெண்ணிறப் பொறி இயக்கம்!
வருகையில் மாந்தோப் பொன்றில்
வாய்த்ததோர் துன்பக் காட்சி!

இளமையும் அழகும் வாய்ந்த
இருபெண்கள் குழல்வி ரித்துக்
குளப்பெரு வாய்க்கால் போலக்
குளிர்விழி நீர்பெ ருக்கி
வெளியுல கைவெ றுத்து
வெள்ளுடை புனைந்தா ராகி
வளர்ந்ததீ யிற்கு ளிக்க
வலம்வந்து கொண் டிருந்தார்!

விழப்போன இளையாள் தன்னை
விலக்கினான் அரசன் மைந்தன்!
விழப்போன மூத்தாள் தன்னை
விலக்கினான் திண்ணன் என்பான்!
"ஒழிப்பானேன் உங்கள் ஆவி?
உற்றதை உரைப்பீர்" என்ன,
விழப்போன இரண்டு பேரும்,
"விடுங்கள்எங் களை" என் றார்கள்.

"உண்மையில் லாத இந்த
உலகினில் வாழ மாட்டோம்;
பெண்மைக்கே மதிப்பில் லாத
பித்துல கத்தை எங்கள்
கண்ணாலும் காண மாட்டோம்;
கைகளை விடுங்கள்!" என்று
திண்மையால் விலக்கு தற்குச்
செயல்திறம் காட்டி னார்கள்

திண்ணனோ கெஞ்ச லானான்!
"சேயிழை யாளே! சாக
ஒண்ணுமோ? உலக மெச்சும்
ஓவியம் மறைய லாமோ?
கண்ணான தமிழ்ம றைந்தால்,
கருகாதோ தமிழர் வாழ்வே?
பண்ணான வாய்தி றந்து
நடந்தது பகர்க!" என்றான்,

மூத்தவள் மொழிய லானாள்;
"முதியபாண் டியன்என் தந்தை
நீத்தான்இவ் வுலக வாழ்வை!
நீள்புகழ்க் குறிஞ்சி நாட்டைக்
காத்திடும் திரைய மன்னர்
கடிதினில் அங்கு வந்தார்
'வாய்த்தமைத் துனற்கு நானே
மணமுடித் திடுவேன்' என்றார்.

'இவள்என் றன் அண்ணன் பெண்ணாள்;
இவளைத்தம் மகனுக் கென்றே
உவப்புடன் அழைத்து வந்தார்
ஊர்வந்தோம்; ஊரார் எல்லாம்

'இவர்கள்ஏன் இங்கு வந்தார்?'
என்றனர்! எதிர்க்க லானார்!
அவனுள்ளான் ஓர மைச்சன்
எதிர்ப்புக்குத் தலைவன் அன்னான்.

'தொழிலாளர் எல்லாம் எம்மைத்
தொலைத்திட ஓடிவந்தார்.
வழிதேட நாங்கள் அந்த
மன்னர்பால் சொன்னோம்; மன்னர்
அழலானார்; அமைச்ச னுக்கே
அஞ்சினார். 'எம்மணாளர்
எழிலான முகமும் பார்க்க
இல்லையே காட்டும்' என்றோம்.

'அவர்களால் உம்மைக் காத்தல்
ஆகாது; மன்னி வீட்டின்
சுவர்க்கோழி போல ஒட்டிக்
கொள்ளுக என்று சொன்னார்.
அவர்சொன்ன வாறு செய்தோம்.
வந்தனர் பகைவர் அங்கும்;
கவலையால்மன்னி யாரும்
எங்களைக் கைவிட் டார்கள்.

'எங்கேனும் கண்கா ணாத
இடத்தினில் மறைந்தி ருப்பீர்;
உங்களைச் சிறிது நாளில்
உங்களின் மணவா ளர்பால்
மங்காமல் கூட்டி வைத்து,
மகிழுவேன் என்றார் மன்னர்.
இங்குவந் திருந்தோம், மன்னி
இறந்தது கேள்வி யுற்றோம்.

'வீழ்வதா இந்தத் தீயில்?
அல்லதித் தீய நாட்டில்
வாழ்வதா? உம்மை நாங்கள்
வரம்ஒன்று தரக்கேட் கின்றோம்.
வாழ்வைஇன் புறுத்தும் எங்கள்
மணாளரில் லாஇந் நாட்டில்
வீழச்செய் திடுக! இத்தீ
சந்தனச் சோலை'' என்றாள்.

''நான்தான்உன் மணாளன்'' என்று
நவின்றனன் திண்ணன் என்பான்!
வான்போலும் உயர்வு மிக்கான்
மன்னவன் மகனும், ''நான்தான்

தேன்போலும் மொழியாய்! உன்றன்
திகழ்மண வாளன்! இன்னும்
ஏன் அழு கின்றாய்?'' என்றான்.
இளையாள்பால் அரச மைந்தன்.

''குறிஞ்சிநாட் டுக்கு மன்னி
என் தங்கை என்ற பேச்சு
மறைந்தது; எனக்கி ருந்த
மரியாதை அவள்இ றக்கப்
பறந்தது; மணந்தேன் உன்னைப்
பார்க்கவு மில்லை, அன்னாள்
இறந்தது குறிஞ்சி யின்சீர்
இறப்பதற் காகும்'' என்று.

திண்ணன் தான் நடக்க, மூத்த
சேயிழை தொடர்ந்தாள்! அங்கோர்
வண்ணப்பூங் கிளைகள் தாழ்ந்த
மாவின்கீழ் உட்கார்ந் தார்கள்.
''பண்ணாத துடுக்கெல் லாம்நான்
பண்ணுவேன், திரைய மன்னன்
அண்ணாந்து பாரான்; என்னை
ஏன் என்று கேளான் அன்றோ?

''தங்கையால் தனக்கு வாய்த்த
சலுகைகள் கொஞ்ச மல்ல;
இங்கென்னை மறந்தாள் தங்கை!''
என்று தன் கண் துடைத்தே.
அங்கந்த மூத்தாள் தோளில்
அணிதிகழ் தன்தோள் சேர்ப்பான்.
''தங்கையின் மனத்தின் வண்ணம்
தார்வேந்தன் செய்தி ருந்தால்,

''நானன்றோ குறிஞ்சி மன்னன்?
நங்கைக்கு நானிப் பூவின்
தேளன்றோ?'' என்று கூறிச்
சேயிழை கூந்தல் நீவி.
மீனல்றோ விழிஉ னக்கே!
மின் னன்றோ இடை யுனக்கே!
கோன்என்றால் நானே! நீயோர்
கோமகள் அன்றோ!'' என்று.

கன்னப்பூக் கிள்ளிக் கிள்ளி
கைவிரற் சுவைத்தேன் உண்பான்.
''என் அத்தான்!'' என்றாள்; ஆவி
உடல்பொருள் இன்றோ டெல்லாம்

உன்னைத்தான் சேரும் என்றிம்
மாம்பழம் உனக்க ளித்தேன்;
என்னைத்தான் காத லித்தாய்
என்றிதை உண்ண வேண்டும்''.

எனக்கூறி மாம்ப ழத்தை
ஈந்தனள்; திண்ணன் உண்டான்!
அனைத்துவேர் அற்று வீழும்
அரசென வீழ்ந்தான் மண்ணில்!
தினைத்துணை உயர்வு மின்றித்
தீர்ந்தது திண்ணன் வாழ்வு!
மனத்தினில் மகிழ்ச்சி யோடு
மற்றவள் வருகை பார்த்தாள்.

''அன்னவள் மன்னன் மைந்தன்
தீர்ந்தனன்!'' எனப்ப தைத்தே,
''உன்னவன் செய்தி என்ன?
உரை'' என்று கேட்டு வந்தாள்.
''அன்னவன் தானும் செத்தான்;
முழுவெற்றி அடைந்தோம்!'' என்று
இன்னலே உருவாய் வந்த
விநோதைதான் இயம்பினாளே.

மங்கையர் பொறியி யக்க
வண்டியை இரண்டு டம்பை
அங்குள்ள குளத்தி லிட்டே.
அறஞ்செய்தார் போல்ம கிழ்ந்தே.
திங்கள்வெள் ளாடை நீக்கிச்
செழியபொன் னாடை பூண்டு.
தங்கள் ஓர் வண்டி ஏறித்
தகதக என்று சென்றார்.

## பிரிவு—19

(இலவந்தோப்பில் செழியன் முதலியோர் போகின்றனர்.)

நிலவின் ஒளியில், இலவந் தோப்பில்
அறிவ ழகனெனும் அமைச்சனும், படையின்
தலைவ னான சேந்தனும், தக்க
செழியன் என்னும் சேந்தனின் நண்பனும்
வல்லான் துணைப்படைத் தலைவனும் வந்தே,
அரசியல் நிலையை ஆய்வா ரானார் :
அமைச்சன், ''அன்புறு தோழரே! அரசரின்
தமிழத் தன்மை சரிந்தது. நாடு
மொழிகலை ஒழுக்கம் நாக ரிகம்
ஆகிய வற்றில் அக்கறை ஒழிந்தது.
ஒன்றுக்கு மன்னர் உயிர்வாழ் கின்றார்;
அவ்வொன்று விநோதை அடியிற் கிடத்தல்.

அரசி யாரை அணுக வில்லை;
அரசர் செய்கை பெருவியப் பன்றோ?
அரசியார் சாகக் காரணர் அரசர்!
குறிஞ்சி கண்ட தில்லைஇக் கொடுமை!
அரசியார் தற்கொலை அடைந்தார்; அரசரும்
தற்கொலைக் காகத் தாங்கிய வாளும்
தையல் விநோதையால் தடைபட்ட தென்றால்
மன்னனுக் கென்றோர் மனமே இல்லை.
அவள்மனம் அரசர் மனமா யிற்று.
மன்னியார் மாண்டதைத் திண்ண னுக்கும்
இளந்திரை யனுக்கும் சொன்னோம். இருவரும்
தொலைபொலிக் கருவியால் வருவதாய்ச் சொல்லினர்
இங்குவரவில்லை, அங்கும் இல்லை!
வழியில் அவர்களை மாய்த்தவர் பாவர்?

அன்று விநோதையும் அம்புயந் தானும்
பொறி இயக்க வண்டியிற் பொருந்தி
நகர்ப்புறம் நோக்கிச் சென்ற தாய்நம்
துப்பறி கின்றவர் சொல்லக் கேட்டோம்.
வழிம டக்கி அவர்களை மாய்க்கும்
ஆற்றலோ அந்த மங்கையர்க் குண்டு?
திண்ணன் என்னுமச் சின்ன அண்ணனும்
இளந்திரை யன்எனும் ஏந்தல் மகனும்
உயிருடன் இருப்பதாய் உரைத்தார் இல்லை.
அறத்தின் தலைவி அரசி இல்லை;
திண்ணன் இல்லை; சீற்ற வேங்கையை
எற்றிய இளவர சிளந்திரைய னில்லை.
நாமிருக் கின்றோம்'' என்று நவின்றான்.

சேந்தனின் நண்பன் செழியன் சொல்வான்;
''நாமிருக் கின்றோம்'' தோழரே! நாட்டினர்
தாயிருக் கின்றார்; தாக்குவோம் பகையை!
நெஞ்சம் என்னும் நன்செய் நிலத்தில்
நடவுக்கு மதமெனும் நாணல் சேர்த்த
விநோதையைத் தாக்குவோம்! விநோதை யாளின்
கூட்டம் கூட்டோடும் ஒழியத் தாக்குவோம்!
கருப்பையால் வராததும் விருப்பொன் றிராததும்
உருக்கொள் ளாததும் ஆகிய ஒருபொருள்.
தெருத்தொறுங் குந்தி இருக்குமென் றுரைக்கும்
உருப்படாக் கோயில் உருப்படக் கண்டால்
தாக்குவோம்! தாய்க்குத் தனிப்புகழ் ஆக்குவோம்
வந்துள நோய்க்கு மருந்து கொடுப்போம்!
அந்நோய் மீண்டும் அணுகா திருக்க
ஓர்நல் மருந்து குடியர சொன்றே!''
என்று கூறிய அளவில்
சென்றனன் பேச்சில் மன்றில் சேந்தனே.

## சேந்தன் பேச்சு மன்றில் பேசுகின்றான்

### எண்சீர் விருத்தம்

'வல்லானின் உணர்ச்சி வெள்ளம் வரம்பு மீறி
வாய்க்காலை யுடைத்துக்கொண் டோடக் கண்டோம்!
செல்லுமா வல்லானின் எண்ண மெல்லாம்?
திடீரென்று பகைவர்களைத் தாக்கு தற்கே
எல்லாரும் ஒப்புவரா? படைவீ ரர்கள்
இன்றைநிலை அறிவாரோ? மன்னனைப் போய்க்
கொல்லுகஎன் றால்கொல்ல ஒப்பு வாரோ?
கொடுமைகளை மக்களுக்கு விளக்க வேண்டும்.

"தோழர்களே! மன்னவனும் விநோதை தானும்
தூய்மையிலா மற்றவரும் குறிஞ்சித் திட்டு
வாழாத வகைபுரிந்து வருகின் றார்கள்;
மாற்றியமைத் திடவேண்டும் ஆட்சி தன்னை;
ஏழைமுதல் எவருமுணர்ந் திடுதல் வேண்டும்;
பெரும்பாலோர் நம்கருத்தை ஏற்க வேண்டும்;
சூழ்நிலையை எண்ணாத மறவன் கையில்
துப்பாக்கிக் குண்டெல்லாம் சுண்டைக் காயே!

"எழிலான இளந்திரையன் திண்ணன் என்ற
இருவருமே வரும்வழியில் விநோதை தானும்
அழகுடையை அம்புயமும் தடுத்துத் தங்கள்
அழகாலே வஞ்சித்துக் கொன்றி ருந்தால்
கழிவியப்புக் கொள்ள அதில் என்ன உண்டு?
கையாலா காதவர்க்கு வஞ்சம் ஒன்றே
வழிகாட்டும்! வஞ்சகரை வீரர் என்று
நம்அமைச்சர் சாற்றினார் சரியே அல்ல.

"நம்மனோர் மிகவிழிப்போ டிருக்கவேண்டும்;
நாம்இதிலே ஒருசெய்தி அறிய வேண்டும்.
அம்மாதர் பலவஞ்சம் புரிதல் கூடும்
அவ்வகையால் விழிப்புடன்நாம் இருக்க வேண்டும்.
இம்மண்ணில் ஆடவர்க்குப் பெண்என் றாலே
எஃகுமனம் மெழுகாகும்! அதிலும் அப்பெண்
செம்மையுற இளமைஎழில் பெற்றி ருந்தால்
திருக்குறிப்புத் தொண்டர்தாம் சேயி ழைக்கே!

"ஆதலினால் விநோதையிடம் அணுகு வோர்கள்
அடகுவைத்து விடவேண்டாம் தம்நெஞ் சத்தை
யாதுசெய்ய வேண்டுமினித் திட்டம் ஒன்றே
ஏற்படுத்திக் கொளவேண்டும்; திட்டம் இன்றி
மோதுவது காரிருளில் கண்ணில் லாதான்
மோதுவதாய் முடியும் நகை யாடும் வையம்;

தோதாக ஆலையிலே வேலை செய்யும்
தொழிலாளர் தலைமுதலில் தொடுதல் வேண்டும்.

"பயிர்த்தொழிலா ளிகள்செய்தி பொத்தற்கூடைப்
பயறாகும்; நிலைமையிலே சிறிது யர்ந்து,
வயல்வரப்பில் குடைபிடித்து நின்று கொண்டு
வசைபாட்டுப் பாடிடுவார் தொழிற்கூட் டத்தை
வெயில்தனிலே துடிக்கின்ற குறிஞ்சித் திட்டை
விடுதலைசெய் வோம். உடைமை பொதுவாய்ச்
செய்வோம்!

அயலார்கள் நம்திட்டம் தன்னிற் சேர்த்தே
அவர்களையும் இந்நாட்டுக் கொடியில் சேர்ப்போம்!

தனிமனிதன் ஆட்சியினி வேண்டாம்!" என்று
படைத்தலைவன் சேந்தன்தான் சாற்றி நின்றான்

"இனிதென்றார். தீமையிரா தென்றார்," அங்கே
இருந்தவர்கள் எல்லாரும்! "விநோதை கூட்டம்
நினைவதென்ன, நிகழ்த்துபவை என்ன? என்று
நேரிற்சென் றறிவதற்குத் தோழர் சில்லோர்
தனித்தனியே திரிந்துவர வேண்டும்! என்றார்;
தமிழ்வாழ்த்தி நிறுவனத்தை வாழ்த்திச் சென்றார்.

## பிரிவு—20

### (தரும இல்லத்தில் வேந்தனும் விநோதையும்)

### அறுசீர் விருத்தம்

தருமஇல் லத்தில் ஓர்நாள்
தார்வேந்தன் விநோதை யோடு
பெருமகிழ் வோடி ருந்தான்;
வயிற்றினைப் பிசைந்த வாறே
ஒருகூட்டத் தார்பு குந்தார்;
"கூலியை உயர்த்த வேண்டும்;
விரைவாக ஆலைக் காரர்க்
கறிவிப்பு விடுப்பீர்!" என்றார்.

"குறைபாட்டை முதலா ளிக்குக்
கூறுவேன்; அவர்எண் ணத்தை
மறையாமல் உமக்குச் சொல்வேன்.
மற்றுநான் உம்க ருத்தை
நிறைவேற்ற முடிவ தில்லை.
நீங்களோ என்னைப் பற்றி
முறையற்ற வகையில் பேச
முயல்கின்றீர்! என்றான் மன்னன்.

பதைக்கின்றோம்! வயிற்றுக் கின்றிப்
பதைக்கின்றோம்! உம்மைக் காண
உதைக்கின்றார், அரண்ம னைக்குள்
ஒற்றைஆள் நுழையச் சென்றால்!
கதைக்கின்றான் ஆலைக்காரன்.
காட்டடா இரக்கம் என்றால்!
இதற்கெல்லாம் காரணம் யார்?
ஏந்தலே! நீவி ரன்றோ?

ஏற்றடா. கூலி! என்று
மன்னவா இயம்பும் ஓர்சொல்
சோற்றுக்கு வழியும் செய்யும்;
சோர்வினைப் போக்கும், யாரும்
கூற்றுக்கே இரையா கார்கள்;
குழந்தைகள் அழுகை வீழும்;
வீற்றிருக் கின்றீர் அங்கே
விளைவினைச் சொல்வ தெங்கே?

''எருமைபோல் குடிசைச் சேற்றில்
புரளவும் அட்டி இல்லை;
ஒருமையாய் நாங்கள் எல்லாம்
உறங்கவும் அட்டி இல்லை.
எரியினை மிதித்த வர்கள்
எதிர்நோக்கிக் குதித்த தைப்போல்
தருமஇல் லம்கு தித்தோம்,
தணற்பசி எரித்த தாலே!

''உமை நாங்கள் திட்ட வில்லை;
உயிர்போகும் நிலையை நாங்கள்
எமக்குள்ளே பேசிக் கொண்டோம்!
எவர்களோ அதனை மாற்றி
நமக்குள்ளே பகையை மூட்ட
நவின்றனர் போலும்! நீரும்
உமக்கொவ்வாச் செயல்செய் கின்றீர்
உரைப்பதை நம்பு கின்றீர்!''

என்றிவ்வா றுரைக்கும் போதே
ஏந்திழை விநோதை, அங்கே
வன்றிறல் படைத் தலைவன்
சேந்தனை வரும்ப டிக்குப்
பொன்றாது தொலைவில் பேசும்
பொறிவழி யாய் அழைத்தாள்.
நன்றுற வந்தான் சேந்தன்!
நடுக்குற்றார் அரசும், மாதும்!

''சேந்தனே. தொழிலா ளர்கள்
திடுக்கிடச் செய்கின் றார்கள்!

தீர்ந்ததென் பெருமை இந்தத்
தீயரால்! என்றன் ஆட்சி
தேய்ந்திடச் செய்வ தற்கும்
திடிரென்று தாக்கு தற்கும்
போந்தனர் தரும இல்லம்,
வருவதைப் புகன்றா ரில்லை.

"வந்தனை நல்ல வேளை;
வராவிடில் செத்தி ருப்போம்!
இந்தத்தீ யோரை யெல்லாம்
இழுத்துப்போய்ச் சிறையில் போடு;
முந்தின நாளில் இன்னார்
முயல்போல இருந்தார் இன்று
கொந்திடும் புலியா கின்றார்!
காரணம் புரிய வில்லை!

"இழுத்துப்போ என்றன் ஆணை!"
என்றனன் திரைய மன்னன்.
கழுத்தினில் கைகொ டுத்துக்
"கடிதினில் போவீர்!" என்று
முழுப்படைத் தலைவன் கூற
முற்சென்றார் தொழிலா ளர்கள்;
தழைத்தது நாட்டில் எங்கும்
தனிச்சிறை நிறைந்த செய்தி!

அங்கவர் சென்ற பின்னர்,
விநோதையை அரசன் கேட்பான்.
"இங்குளார் எனக்க டங்கார்;
எவருக்கும் நான டக்கம்!
எங்கணும் நடவாச் செய்தி
இங்குகாண் கின்றேன் என்னில்
நங்கையே உன்கண் நேரில்
நடந்ததற் கென்ன சொல்வாய்?

"சேந்தனை அழைக்கச் சொன்னீர்,
தெரியாமல் அழைத்தேன்! வந்தான்;
நேர்ந்ததை உரைத்தீர், அன்னோன்
நெட்டித்தள் ளிச்சென் றான், அம்
மாந்தரும் அடங்கிச் சென்றார்.
மற்றிதைத் தொடர்ந்தே தேனும்
வாய்த்திட்டால் தொல்லை ஒன்றும்
வராவகை செய்தல் வேண்டும்.

"திருக்கோயிற் பணிமுற்றிற்றுத்
தெருவெலாம் முரச றைந்தே
வரச்சொல்லி ஆணை இட்டேன்;
வருவார்கள் கோயி லுக்கே.

அரசரங் கெழுந்த ருள்க!
அமைச்சரும் வருதல் வேண்டும்.
பெரும்படைத் தலைவன் சேந்தன்
பிறருமங் கிருத்தல் வேண்டும்.''

என்றனள் விநோதை! மன்னன்
''எனக்கெனச் செயல்ஒன் றில்லை.
உன்எண்ணம் என்றன் எண்ணம்.
உயிர்நீதான் நான்உ டம்பே,
இன்றல்ல நாளை அல்ல
என்றைக்கும் குறையா இன்பத்
தென்றலே, வாடி! உன்றன்
திருமேனி பூசென் மேலே!''

எனஇவர் இங்கி ருக்க,
யானைமேல் முரச றைந்தே,
''அனைத்துயிர் ஆக்கிக் காத்தே
அழித்திடும் பெருந்தெய் வந்தான்,
தனித்திட்ட நம்ம னோர்பால்
தளிர்த்திட்ட அருளி னாலே.
தினைக்கொல்லை தனில மைத்த
திருக்கோயில் வந்த துண்டு!

''திருப்பெயர் ஒன்றும் இல்லான்,
சிவன்என்னும் பேர்பு னைந்தான்!
இருப்பிடம் ஒன்றும் இல்லான்!
இக்கோயில் இடமாக் கொண்டான்.
விருப்பென்ப தொன்று மில்லான்
நமைக்காக்கும் விருப்பம் கொண்டான்,
உருப்பாடொன் றில்லான்; நாட்டார்
உருப்பட உருவங் கொண்டான்.

''திருக்கோயில் வருக யாரும்!
திறப்புநல் விழாஇன் றேதான்.
இருக்குமங் காடல் பாடல்;
இன்பநல் ஓவி யங்கள்!
விரித்திடும் மலர்ம ணத்தை
விரைந்திடும் நறும்பூ சைதான்;
அருந்தமிழ்ப் புலவர் ஆங்கே
சொற்பெருக் காற்று வாரே!

''ஆடவர் வருக, மாதர்
அனைவரும் வருக! வந்து
தேடரும் அருளை அங்கே
சிவன்தரப் பெறுவீ ராக!